# விவிலிய வினாடி வினா

## சரியான விடைகளை எழுதியவர்கள்

### அருட்சகோதரிகள்

லூர்து மேரி, மேரி செசாரியா- சென்னை, வில்சன் மேரி, எதெல்பர்கா, ஜோஸ்பிட்டா மேரி, மெர்சி ஏஞ்சலா- திருச்சி, ஸ்டெல்லா ரோஸ்,ஜெயசேகரி -கொடைக்கானல், ஜெரின் மேரி - திண்டுக்கல், லில்லி புஷ்பம், மேரி மௌரிஸ், ஜூ லி எலிசபெத்- தஞ்சாவூர், டோனெட்டல்லா அனஸ்தாசியாள், அனன்சியா மேரி, லூக்காஸ் மேரி, ஜார்லத் புஷ்பா, டோம்னா மேரி, பவுலின் மேரி - கும்பகோணம், விமல் மேரி, இரஞ்சிதம், லில்லி இஸபெல்லா மேரி, ஜான்சி மேரி - மதுரை, புஷ்பம் - சிந்தாமணி, ரூபி மேரி - கரூர், ஆக்னஸ் ரோசாள் மேரி, ரூபெல்லா மேரி, வித்யா மேரி, லோரா மேரி - தூத்துக்குடி,சலேத் மேரி-திருப்பூர், அர்மெல்லா - கன்னியாகுமரி, புஷ்பா மேரி - சிவகங்கை, சகாயம்- கடலூர், ஜெரின் மேரி, ஸ்டெல்லா ரோஸ் - திண்டுக்கல், பிரேமா - தாழையூத்து

### பொதுநிலையினர்

பிரான்சிஸ் பேசில், மேரி மார்கரேட், அனிருத் ஜோஸ்வா, ஆனி பீட்டர் ராஜ், லீமா தெரஸ், இமாக்குலேட் சோபியா, ஜெகரெட்சகன் ஜோசப், பாத்திமா, நான்சி பியூலா, செலின் மேரி - திருச்சி; புஷ்பக்கண்ணு, மிக்கேல் சாமி - கோயம்பத்தூர், வியாகுல மேரி, ஜெயராஜ் - சென்னை, சிப்ரியன்-தெளி, மேரி - இளையரசனேந்தல், இருதய விஜிலா, மார்கிரேட் பெல்சியா, அமல செல்வி, அற்புத சீலி, லீலாவதி - திண்டுக்கல், ஜோஸ்பின் சகாய ராணி - கும்பகோணம், ததேயுஸ் கரோலின் - திருப்பூர், மரிய பிரகாசம் - தர்மபுரி.

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்



**அருட்சகோதரி. லில்லி இஸபெல்லா மேரி -மதுரை**
**திருமதி. வியாகுல மேரி - சென்னை**

Owned and Published by THE ORDER OF SERVANTS OF MARY from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097 and Printed by M. RAJA REGAN at Devan Press, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014.
Editor: Fr. R.M. UGIN WINNER OSM.








# எங்கள் தாயே

## பதிப்பாசிரியர் பக்கம்


ரு.ம. யூஜின் வின்னர் ம.ஊ.ச

ஆகட்டும் இதழின் வாசகர்களே அன்னை மரியின் பக்தர்களே. தாய்மை என்பது பெண்களின் வாழ்வில் முழுமை. அத்தகைய தாய்மை என்னும் பேற்றினை மரியாள் பெற்றது உலக வரலாற்றில் நடைபெறாத ஒன்று. அத்தகைய தாய்மை என்னும் பேற்றினை மற்ற பெண்களைப்போல கணவரின் துணையோடு பெறவில்லை மாறாக தூய ஆவியின் துணையோடுதான் பெற்றார். அதுவும் இதுவரை உலகில் தாய்மை என்னும் பேற்றினைப் பெற்றவர்கள் எல்லாம் மனிதர்களைத்தான் குழந்தையாகப் பெற்றெடுத்திருக்கின்றார்கள். ஆனால் மரியாள் என்ற தாய் மட்டும்தான் இயேசு என்ற தெய்வத்தைப் பெற்றெடுத்திருக்கின்றார்.

நம்மைப்போல் இந்த மண்ணிலே மனிதனாகப் பிறந்த ஒருவர் கடவுளுக்கு தாயாக முடியுமா? இது சாத்தியமா? இந்தக் கேள்வியானது தொடக்க காலக்கட்டத்திலிருந்து இன்றுவரை தொடர்ந்து கேட்கப்படும் கேள்வியாக இருந்து வருகிறது. இந்தக் கேள்விகளைத் தொடர்ந்து கேட்கின்றவர்கள் ஒரு உண்மையினை மறந்து விடுகின்றார்கள். அந்த உண்மை என்னவென்றால் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை. கடவுளுக்கு அனைத்தும் சாத்தியமே. பொதுவாக தாய் தன்னுடைய பிள்ளையைத் தேர்ந்தெடுத்து பெற்றுக் கொள்வதில்லை அதுபோல பிள்ளையும் தனக்கான தாயைத் தேர்ந்தெடுத்துப் பிறப்பதில்லை. ஆனால் இங்கு கடவுளான மகன் தனக்கான தாயைத் தேர்ந்தெடுத்துப் பிறக்கின்றார்.



## உள்ளே



| | |
|---|---|
| கதையினில் கலந்த மரியா | - 05 |
| நம்பிக்கையின் நங்கூரம் மரியா | - 06 |
| அன்னையின் திருத்தலங்களை நோக்கி | - 09 |
| விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி | - 14 |
| புத்தாண்டே வருகவே | - 16 |
| ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன் | - 17 |
| மரியின் ஊழியர்சபையின் புனிதம் | - 24 |
| மாதா மன்றாட்டு மாலை | - 25 |
| பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் | - 28 |
| அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள் | - 30 |
| ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி | - 32 |

அவ்வாறு பிறந்த இயேசு கிறிஸ்து நினைத்திருந்தால் குழந்தையாக இந்த உலகத்திற்கு வராமல் ஒரு ஞானியாக இந்த உலகத்தில் நுழைந்திருக்கலாம் இல்லையென்றால் ஒரு அரசனாக இந்த உலகத்தில் நுழைந்திருக்கலாம். ஒரு இளைஞனாக இந்த உலகத்தில் நுழைந்திருக்கலாம். இல்லையென்றால் ஒரு வயது முதிர்ந்த நபராக இந்த உலகத்தில் நுழைந்திருக்கலாம். ஆனால் ஒரு குழந்தையாக இந்த உலகத்தில் நுழைந்தார். காரணம், யூதக் கலாச்சாரத்தில் குழந்தைகள் இரண்டாம்தர மக்கள். ஆகவே அவர்களில் ஒருவராக இந்த உலகில் பிறக்கின்றார். அவர் சொன்ன வார்த்தை சிறு குழந்தைகளை என்னிடம் வரவிடுங்கள் அவர்களைத் தடுக்காதீர்கள் என்றும் இந்த சிறு குழந்தைகளைப் போல நீங்கள் மாறாவிட்டால் விண்ணரசுக்குள் நுழைய முடியாது என்றும் கூறுகின்றார்.

அவ்வாறு குழந்தையாகப் பிறந்த இயேசு நினைத்திருந்தால் மிகப் பெரிய செல்வந்தக் குடும்பத்தில் ஒரு குழந்தையாகப் பிறந்திருக்கலாம். இல்லையென்றால் ஒரு மிகப் பெரிய அரசனுக்கு குழந்தையாகப் பிறந்திருக்கலாம். இல்லையென்றால் ஒரு மிகப் பெரிய குருவிற்கு மகனாகப் பிறந்திருக்கலாம். ஆனால் ஒரு ஏழைக் குடும்பத்தில் மகனாகப் பிறந்தார். அதே இயேசு என்னும் குழந்தை நினைத்திருந்தால் வீட்டில் குழந்தையாகப் பிறந்திருக்கலாம். இல்லையென்றால் சத்திரத்திலாவது பிறந்திருக்கலாம். ஆனால் அவர் மாட்டுத் தொழுவத்தில் பிறக்கின்றார்.

ஆண்டவர் இயேசு தன்னுடைய பிறப்பிற்காக தேர்ந்தெடுத்த இடம் மிகவும் எளிய இடம் அவர் தேர்ந்தெடுத்த பெற்றோர் மிகவும் எளிய பெற்றோர் அவர் தேர்ந்தெடுத்த வடிவம் மிக எளிய வடிவமான குழந்தை வடிவம். நம் இயேசு ஏழைகளின் கடவுள் எளிய மக்களின் கடவுள். அதனால்தான் அவரின் பிறப்பின் முன்னறிவிப்பானது சமூகத்தில் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களான இடையர்களுக்கு முதலில் சொல்லப்பட்டது. எத்தனையோ யூதப் பெண்கள் தங்களின் வயிற்றில் மெசியா பிறக்க மாட்டாரா என்று ஏங்கிக் கொண்டிருக்கும்போது அந்த மிகப் பெரிய பேற்றினை அதிகம் பிரபலம் ஆகாத ஊரான நாசரேத்தில் வாழ்ந்த கன்னியான மரியாவுக்கு வாய்ப்பு கிடைக்கின்றது. நம் கடவுள் தன்னுடைய மக்களுக்கு அளவுகடந்த சுதந்திரத்தைக் கொடுப்பவர். அவர் ஒருபோதும் தன்னுடைய ஆசைகளை, கருத்துக்களை மக்கள்மீது திணிப்பது கிடையாது. அதனால்தான் என்னதான் தன் மகனுடைய பிறப்பிற்காக அன்னை மரியாளை ஏற்கனவே முன்குறித்து வைத்திருந்தாலும் அவருக்கு அந்தக் கருத்தில் விருப்பம் இருக்கின்றதா என்று சோதிக்கதான் கபிரியேல் தூதரை அனுப்பி வைக்கின்றார். அவரும் தனக்கு இதில் முழுசம்மதம் என்று இதோ ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு ஆகட்டும் என்று சொன்னபின்தான் தூய ஆவியார் கன்னி மரியாள்மீது நிழலிடுகின்றார் அவர் கருவுறுகின்றார் இயேசுவைப் பெற்றெடுத்து கடவுளின் தாயாக மாறுகின்றார். இயேசு என்னும் கடவுளின் தாயாக மாறியவர் அவர் மூலம் உலக மக்கள் அனைவரின் தாயாக மாறுகின்றார்.

**கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட தாய்**
**அவர்தான் உலக மக்களின் தாய்**





**தெரசா – திருநின்றூர்**

என்னுடைய மகளுக்கு திருமணமாகி 10 ஆண்டுகளாக குழந்தை இல்லை. 2017-ம் ஆண்டு அக்டோபர் மாதம் ஒரு ஆண் குழந்தையைக் கொடுத்தார். இப்போது அவனுக்கு 7 வயது. ஆட்டிசம் என்ற மன இறுக்க நோய் இருந்தது. என் மகளுக்கு உடலில் கட்டி இருந்தது. அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். அன்னையிடம் வேண்டினேன். அறுவை சிகிச்சை நல்ல முறையில் நடைபெற்றது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

எனக்கு திருமணமாகி 5 ஆண்டுகள் ஆகின்றது. குழந்தை இல்லை. 2023-ம் ஆண்டு இங்கு வந்து ஜெபித்தேன் எனக்கு திருவிழாவுக்கு முன்பாக குழந்தை கொடுங்கள் என்.. அதேபோல் அக்டோபர் மாதம் ஒரு அழகிய ஆண் குழந்தையைக் கொடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**டோனி – மணிகுண்டம், கும்பகோணம்**

என்னுடைய மனைவியின் தங்கை மூலம் குழந்தை இயேசு ஆலயத்தைக் குறித்து தெரிந்து கொண்டேன். இங்கு வந்து ஜெபம் செய்துவிட்டு சென்றபோது புனித பெரகிரின் சுருபத்தைப் பார்த்து புற்றுநோய்க்கு புனிதரா என்று வியந்தோம். ஊருக்கு சென்றோம். எனது மாமியாருக்கு மார்பக புற்றுநோய், நாங்கள் அன்னையிடம் ஜெபித்தோம், இங்கிருந்து எடுத்து சென்ற வளையலை அணிவித்தோம். அறுவை சிகிச்சை செய்தோம். அதன்பின் கீமோ எட்டு டோஸ் மருத்துவர் கொடுத்தார், பக்க விளைவுகள் வரலாம் என்றார். நாங்கள் தஞ்சாவூர் சென்றபோது அங்கு புனித பெரகிரின் சுருபத்தை வாங்கி வந்து ஜெபித்த பிறகு என் மாமியார் நன்றாக இருக்கிறார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ப்ரமோத் - ராயபுரம்**

எங்களுக்கு திருமணமாகி 4 ஆண்டுகளாக குழந்தை இல்லை. உறவினர்கள் மற்றும் அக்கம் பக்கத்தினர் குழந்தை இல்லையே என்று கேட்டார்கள். அதனால் தனியாக செல்வோம் என்று முடிவு செய்து சோழிங்கநல்லூருக்கு வந்தோம். வந்த ஒரே ஆண்டில் நான் கருத்தரித்தேன். காத்திருப்பு உங்களுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தரும் என்பார்கள். அதேபோல் எங்களுக்கு இரட்டை குழந்தைகள் பிறந்தது. ஒரு ஆண் குழந்தை ஒரு பெண் குழந்தை. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**ஸ்டீபன் – திருநின்றூர்**

எனக்கு திருமணமாகி 10 ஆண்டுகள் ஆகின்றது. என் மனைவிக்கு இரண்டு முறை கருகலைந்தது. அதன்பின்பு வேலை காரணமாக ஆலயம் பக்கத்தில் வீடு பார்த்தோம். எதுவுமே கிடைக்கவில்லை. அன்னையிடம் கேட்டேன். அதன்பின்பு இங்கு வந்து இரண்டு ஆண்டுகள் ஆனது. பின்பு வேலையில் பிரச்சனை வந்தது. 2023-ம் ஆண்டு 23-ம் தேதி டிசம்பர் அன்று தியானம் நடைபெற்றது. வேலையின் நிமித்தமாக அழைப்பு வந்தது மருத்துவமனையில் இருந்து. அதன்பின் மாதங்கள் போனது. நான் வேலை செய்த மருத்துவமனையில் IVF சிகிச்சைக்கு சென்றோம். அன்னையிடம் தொடர்ந்து வேண்டினோம். இறுதியாக என் மனைவி கருத்தரித்தார். இந்த பிரசவம் ஆபத்தான நிலையில் இருக்கின்றது என்று மருத்துவமனையில் 15 நாட்கள் அட்மிட் செய்தோம். நவம்பர் 5-ம் தேதி ஒரு அழகிய ஆண் குழந்தை பிறந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!



# ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி

அருட்சகோ. டேவிட் ஸ்டேன்லி மஊச
சோழிங்கநல்லூர், சென்னை

டிசம்பர் மாதம் 7 ஆம் தேதி மாதத்தின் முதல் சனிக்கிழமை. ஜீவமாதாவுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட நாள். அன்றுதான் ஜீவ மாதா திருநாளும் கொண்டாடப்பட்டது. பக்தர்கள் கூட்டம் சற்று அதிகமாகவே காணப்பட்டது. வந்திருந்த அனைத்து மக்களும் பக்தியோடு செபமாலை, குணமளிக்கும் நற்கருணை ஆராதனை, சாட்சியப் பகிர்வு, திருப்பலி என்று அனைத்து திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு இறையாசியை அன்னையின் பரிந்துரை வழியாக வேண்டினர். மேலும் அவர்கள் கூறிய சாட்சியங்கள் பலரது வாழ்வில் நம்பிக்கை ஒளியை பிரகாசிக்க வைத்திருக்கின்றது. அந்த சாட்சியப் பகிர்வுகள் இதோ உங்களுக்காக:

**தெரசா – திருவொற்றியூர்**

நான் இந்த ஆலயத்தைக் குறித்து இதழ்கள் மூலமாக தெரிந்து கொண்டேன். முதன் முறையாக என் மகளின் படிப்பிற்காக வந்தேன். அவள் 12-ம் வகுப்பு தேர்வுக்காக ஜெபித்தேன் நல்ல மதிப்பெண்கள் கிடைக்க வேண்டும் என்று. அன்னை மரியாள் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கின்றார். என் மகளும் அதிக மதிப்பெண்ணை எடுத்தார், இப்போது என் மகளுக்கு திருமணமாகி மூன்று ஆண்டுகள் ஆனது. முதன்முறை குழந்தை இறந்தது. இரண்டாம் முறை கருக்கலைந்தது, அதன்பிறகு மருத்துவர் குழந்தை பிறக்காது என்றார். நான் மரியன்னையிடம் அழுது மன்றாடினேன். மூன்றாம் முறை கருத்தரித்து ஒரு அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

**மேரி – திருநின்றூர்**

என்னுடைய இரண்டாவது மகனுக்கு திருமணமாகி 10 ஆண்டுகளாக குழந்தை இல்லை. என்னுடைய நண்பர் மூலமாக தெரிய வந்தது இந்த ஆலயத்தை குறித்து. 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் சனிக்கிழமை இங்கு குடும்பமாக வந்து அழுது மன்றாடினோம். அதன்பின் கருத்தரித்தார். நவம்பர் மாதம் சர்க்கரை மற்றும் இரத்த அழுத்தம் அதிகமான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அன்னையிடம் அழுது வேண்டினேன். நவம்பர் 5-ம் தேதி ஒரு அழகிய ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!

நான் முதல் முறை இங்கு வரும்போது என் மகள் கருத்தரித்து மூன்று மாதங்கள் ஆகியிருந்தது. அவளுக்கு வயிற்றுப் பகுதி வித்தியாசமான முறையில் சற்று வீங்கி இருந்தது. அன்னை மரியாளிடம் தொடர்ந்து வேண்டினேன். வேண்டுதலின் பயனாக வீக்கம் குறைந்தது. ஜீவமாதாவுக்கு நன்றி! இயேசுவுக்கே புகழ்! மரியே வாழ்க!





# கதையினில் கலந்த மரியா

அருள்பணி. ஆன்றணி ஷாஜி ம.ஊ.ச



**அமைதியின் அன்னை**

ஒரு விவசாயி வைக்கோலை தன்னுடைய நிலத்தில் காயவைத்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய கையில் கட்டப்பட்டிருந்த கைக்கடிகாரம் தவறுதலாக கீழே விழுந்துவிட்டது. அதை அவர் கவனிக்கவில்லை, நீண்ட நேரம் கழித்து மணி என்ன என்று கையைப் பார்த்தார், கையில் கைக்கடிகாரம் இல்லை. எல்லா இடங்களிலும் தேடினார், ஆனால் கிடைக்கவில்லை. மிகவும் சோர்ந்துபோன அவர் அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களைக் கூப்பிட்டு என்னுடைய கைக்கடிகாரத்தை கண்டுபிடித்து தருபவர்களுக்கு பரிசு என்றார். சிறுவர்கள் வெகுநேரம் தேடினர் ஆனால் கிடைக்கவில்லை. சிறுவர்கள் தாத்தா இங்கே எதுவுமே இல்லை. உங்க வீட்ல இருக்குதா என்று போய் பாருங்கள் என்று சொல்லிவிட்டு நகர்ந்தனர். ஒரு சிறுவன் மட்டும் வந்து, தாத்தா எனக்கு ஒரு 10 நிமிடம் கொடுங்கள் நான் கண்டுபிடித்து தருகிறேன் என்றான். சரியாக 10 நிமிடம் கழித்து அந்த கைக்கடிகாரத்தை கண்டுபிடித்து கொண்டு வந்தான். விவசாயி உனக்கு எப்படி கிடைத்தது ஏற்கனவே எடுத்து ஒளித்து வைத்திருந்தாயா? என்றுக் கேட்டார். சிறுவன் நான் அமைதியாக அமர்ந்து மனதை ஒருநிலைப்படுத்தி கைக்கடிகாரத்தில் இருக்கும் முற்களின் அசைவு சத்தத்தை கேட்டேன். அந்த சத்தம் வரும் திசையை நோக்கி பயணித்தேன், கண்டுபிடித்தேன். என்றான்.

உலகின் ஆகச்சிறந்த சொல் அமைதி. நமது உடலுக்கும், மனதுக்கும் தேவைப்படும் சிறந்த சிகிச்சை அமைதியான மனமே. லூக்கா 3:51 அவருடைய தாய் இந்நிகழ்ச்சிகளையெல்லாம் தமது உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார். மரியாள் தெளிந்த நீரோட்டமாய் இருந்தார். சிறிதும் கலங்காமல் பதட்டமில்லாமல் சிந்தனை தெளிவோடு இருந்தார், ஆகவேதான் இறைவனின் அழைப்பிற்கு ஆம் என்று சொல்லி மெசியாவை பெற்றெடுத்தார். இன்று கலங்கிய மனதோடு தலைவெடிக்கிற அளவுக்கு பதற்றத்தோடு பலர் இருக்கின்றனர். ஒருவர் நம்மை தூற்றும்போதும் நமக்கு எதிராக சதித்திட்டம் தீட்டும்போதும் மதிக்காத போதும் நம்பியவர்கள் ஏமாற்றும்போதும் குற்றங்களை அள்ளி குவிக்கும்போதும் அமைதியாக இருக்க கற்றுக் கொள்வோம். மரியின் பாதையில் அமைதியை தேடி அமைதியாகவே வாழ்வோம்.

**HAPPY NEW YEAR**

# நம்பிக்கையின் நங்கூரம் மரியா

அருள்சகோதரி. டெக்லா ம.ஊ.ச.,
சேர்வைட் தலைமையகம், சென்னை.

## தொடக்கவுரை

காலங்கள், யுகங்கள் தோன்றுவதற்கு முன்பே இறைவன் இருக்கின்றார். மிக அழகிய ஓவியமாக இந்த உலகைப் படைத்து, அர்ச்சித்துக் காத்து வருகின்றார். இறைத்திட்டத்தின்படியே அனைத்து மாந்தரும், படைப்புகளும், உயிரினங்களும் இயங்கி, நேர்த்தியாக, காலச்சக்கரம் சுழன்று கொண்டு செல்கிறது. இச்சூழலில் தாயினும் சாலப்பரிந்து நம்மை அன்பு செய்வதன் அடையாளமாக மீண்டும் ஒரு புத்தாண்டைக் கொடையாகத் தருகின்றார். மகிழ்வுடன் நன்றியுணர்வுடன் அவரது அருட்கரத்திலிருந்து இதைப் பெற்றுக் கொள்வோம். ஆண்டின் முதல் நாளிலேயே கன்னி மரியா இறைவனின் தாய் எனும் பெருவிழாவைக் கொண்டாடி மகிழ்கின்றது தாயாம் திருஅவை. ஒவ்வொரு மாதமும் அன்னைக்கு விழா எடுப்பதில் இறை மக்களுக்கும் பேரானந்தம். நமது ஊனக்கண்களால் மரியாவின் உருவத்தை நோக்கும் போதெல்லாம் நமது ஞானக்கண்கள் அவரின் அழகிய ஆன்மீக வாழ்வு, அதில் வெளிப்படும் புண்ணியங்கள், பண்புகள், விழுமியங்கள் அனைத்தையும் நோக்குகின்றன. இவைகள் அவர்பால் நம்மில் ஒரு ஈர்ப்பையும், ஈடுபாட்டையும் எழுப்புகின்றன. அவரைப் போல் மற்றொரு மரியாவாக வாழத் தூண்டப்படுகிறோம். ‘ஆகட்டும்’ முதல் மாத இதழில் நம்பிக்கையின் நங்கூரமாக மரியாவைப் பார்ப்போம். அவர் எவ்வாறு நம்பிக்கை எனும் நங்கூரத்தின் மீது தம் வாழ்வைக் கட்டி அமைத்திருந்தார் என்பதை ஆழ்ந்து சிந்திப்போம்.

## நம்பிக்கை என்னும் நங்கூரம்

நீரில் செல்லும் நீர் ஊர்திகளை நகராமல் நிறுத்திட உதவுகின்ற சாதனம் நங்கூரம் என்று அழைக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். எத்தகைய பெரிய கப்பலாக இருந்தாலும், சிறிய படகாக இருந்தாலும் அவற்றைக் கரையில் நிறுத்தவும், புயல் போன்ற ஆபத்து நேரங்களில் உயிர்களைக் காப்பாற்றவும் நங்கூரம் மிகவும் உதவியாகவும் உறுதியாகவும் இருக்கிறது. அதைப் போன்று நமது வாழ்வில் நம்பிக்கையும் இருக்கின்றது. நம்மீது நம்பிக்கை, பிறர் மீது நம்பிக்கை அனைத்திற்கும் மேலாக இறைவன் மீது நம்பிக்கை ஒரு மனிதனுக்குத் தேவையான இருக்கின்றது. நம்பிக்கையின் அடிப்படையில் நமது வாழ்வு அமையும் போது உண்மையிலேயே அது மகிழ்வாக இருக்கும். இறைவனின் ஆற்றல் மீது நாம் நம்பிக்கை வைக்கும்போது எத்தகைய சூழலை சந்திக்க நேரிடினும் நாம் துணிந்து செல்லலாம். எனவே தான் நங்கூரமானது இத்தகைய நம்பிக்கைக்கு உருவமாகத் தரப்படுகிறது. இந்த நம்பிக்கை புனித பவுலடியாரின் மொழியிலே ஒரு எதிர்நோக்கை அடைய நம்மைத் தூண்டுகிறது. இறைவனின் வாக்குறுதி நிறைவேறும் என்று எதிர்நோக்கில் பயணிக்க நம்மை அவர் அழைக்கின்றார். “இந்த எதிர்நோக்கை நம் உள்ளத்தில் பாதுகாப்பான, உறுதியான நங்கூரம் போன்றுள்ளது” என்று எபிரேயருக்கு எழுதப்பட்ட திருமுகத்தில் கூறுகின்றார். இறைவனை ஒரு நாள் காண்போம். அவர் மகன் இயேசு சென்ற அவ்விடத்திற்கு நாமும் செல்வோம் என்ற எதிர்நோக்கில் வாழ வேண்டும் என்று கூறுகிறார். பழைய ஏற்பாட்டில் ஆபிரகாம் நம்பிக்கையின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். அவரது நம்பிக்கையை சோதிக்கப்பட்டது. ஆனால் கடவுள் என்ற நங்கூரத்தின் மீது அவரது வாழ்வு கட்டப்பட்டிருந்தது. எனவே ஒரு ஒரே மகனைப் பலியிட வேண்டும் என்ற கட்டளை அவரை அசைக்கவில்லை. புதிய ஏற்பாட்டில் நற்செய்தியில் இயேசு என்னும் பாறையின் மீது நமது வாழ்வை கட்டியெழுப்ப அவர் அழைப்பு விடுத்திருக்கின்றார். புயலோ, மழையோ, வெள்ளமோ எதுவுமே நமது வாழ்வைப்





நிகழ்வை ஒரு தெய்வீக விளையாட்டு என்று அக்காலத்திலேயே அழைத்துள்ளார். இத்தகைய தெய்வீக விளையாட்டை விளையாடும் முதல் பெண்மணி அன்னை மரியா என்று அழைத்துள்ளார். அன்னை மரியா கபிரியேல் வானத்தூதர் வழியாக கடவுளோடு பேசத் துணிந்துள்ளார். கடவுளோடு வியைாடத் துணிந்துள்ளார். எனவே அன்னை மரியா சிறிது தயங்கியதாக குறிப்பிடுகிறார். இக்கால மனிதர்கள் இளைஞர்கள் அல்லது சிறு பிள்ளைகள் தங்களின் அன்றாட விளையாட்டுக்களை விடுத்து மனிதர்களோடு விளையாடும் விளையாட்டுக்களை விடுத்து மனம்போன போக்கில் விளையாட பழகிவிட்டார்கள். அதாவது தங்களின் வாழ்க்கைப் பாதையை விட்டு தடம் மாறி, தடம் புரண்டு தொலைப்பேசி என்னும் தொல்லைப் பேசி பள்ளத்தில் வீழ்ந்துள்ளார்கள். பல இளைஞர்கள் பல வகையான விபரீத விளையாட்டுக்களை விளையாடி பணத்தை இழந்து பிறகு தங்களது வாழ்வையும் இழந்துள்ளார்கள். பள்ளிச் செல்லும் சிறார்கள் பெற்றோர்களிடம் பாடங்களை படிக்கிறேன் என்று கூறி பெற்றோர்களுக்கு தெரியாமல் தொலைபேசியிடம் தொலைந்து போய்விடுகிறார்கள். அன்னை மரியாவிடமிருந்து துணிவைப் பெற்றுக் கொள்ளும் நாம், நம்முடைய வாழ்க்கை என்னும் விளையாட்டை விளையாட ஞானம் என்றும் கடவுளின் அருளை அன்னை மரியா பெற்று விளையாடியதுபோல விளையாட அழைக்கப்படுகின்றோம்.

## உண்மையான வாழ்வு

விளையாட்டைப் பற்றி விளையாட்டாக நான் இங்கு எழுதவில்லை. மாறாக விளையாட்டு என்றவுடன் உண்மையான வாழ்வுக்கு வழிகாட்டும் விளைாட்டை பற்றியே புனித அகஸ்டின் கூறும் கருத்துக்களை பார்க்கிறோம். எனவே விளையாட்டை பயனற்ற செயல் எனக் கூறுவதை தயவு செய்து தவிர்ப்போம். விளையாட்டு மனிதர்களை முன்னேற்றப் பாதைக்கு இட்டுச் செல்லும் செயல் ஆகும். விளையாட்டு குழந்தைகளின் உண்மையான முகத்தை திறந்து காட்டும் செயல். எனவே விளையாடும் மனிதன் ஏனோதானோ என்று விளையாடாமல் முழுமையாக பங்கெடுத்து விளையாடுதல் வேண்டும். விளையாட்டில் மனிதன் முழுமையாக விளையாடி முதிர்ச்சி பெறுகிறான்.

## அன்னை மரியாவின் முழுமை

அன்னை மரியாவும் இந்த மீட்பின் விளையாட்டில் முழுமையாக பங்கு பெறுகிறார். அதற்கு மரியா வானத்தூதரிடம் இது எப்படி நிகழும் நான் கன்னி ஆயிற்றே என்றார் லூக் 1:34, என்ற இறைவார்த்தையை மேற்கோள்காட்டி அன்னை மரியா தமது உடல் முழுவதையும் கடவுளின் மீட்பின் விளையாட்டை மேற்கொள்ள தம்மையே தயார்படுத்துகிறார்.

அன்னை மரியா தமது உடல் உயிர் ஆன்மா என அனைத்தையும் முழுமையாக தயார்படுத்தி முழுமையாக பங்கேற்கிறார். வெறுமனே உடல் சார்ந்த விளையாட்டு அல்ல மாறாக உள்ளம் சார்ந்த விளையாட்டு. ஆழமான இதயம் சார்ந்த விளையாட்டு. எல்லாவற்றையும் முழுமையாக மாற்றி அன்னை மரியா வெற்றி பெறுகிறார் இந்த மீட்பின் விளையாட்டில், அன்னை மரியா ஒருங்கிணைந்து விளையாடுகிறார். வார்த்தையாகிய கிறிஸ்துவை தமது உள்ளத்தில் தாங்கி பிறகு உடலில் தாங்குகிறார். உடல் வளர்ச்சியில் உயிர் விளையாடுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

லூக்கா 1:38-ன் வார்த்தையின்படி பின்னர் மரியா நான் ஆண்டவரின் அடிமை உம் சொற்படியே எனக்கு நிகழட்டும் என்று அனைத்தையும் அறிந்த மரியா, முழுமையாக விளையாட தன்னை முழுவதுமாக சரணடையச் செய்கிறார். விண்ணகத் தந்தை ஆசைப்பட்டு விருப்பப்பட்டு கபிரியேல் என்னும் வானதூதர் வழியாக கொடுத்த அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் என்ற இறைவார்த்தையை அன்னை மரியா கேட்டு மீட்பின் விளையாட்டில் (மீட்பின் திட்டத்தில்) முழுமையாக பங்கேற்கிறார்.

# அன்னை மரியாவின் உறவில் வாழ்ந்த புனிதர்கள்

அருட்பணி. டோம்னிக் ஜான் பால் ம.ஊ.ச
தஞ்சாவூர்

15



சென்ற மாத இதழில் பழைய ஏவாளுக்கும் புதிய ஏவாளாகிய அன்னை மரியாவுக்கும் உள்ள தொடர்பை பற்றி பார்த்தோம். இந்த மாத இதழில் முழுக்க முழுக்க லூக்கா 1:26-38 இறைவார்த்தையின் அடிப்படையில் புனித அகஸ்டின் கூறும் கருத்துக்களை பற்றி கூர்ந்து பார்ப்பதற்கு முன்னதாக குறைந்தபட்சம் மூன்று முறையாவது இந்த நற்செய்தி பகுதியினை படித்துவிட்டு இந்த கருத்துக்களைப் படித்தால் இன்னும் தெளிவாக புரியும்.

**லூக்கா நற்செய்தி**

புதிய ஏற்பாட்டில் நான்கு நற்செய்தி நூல்கள் உள்ளன. அதில் மரியாவின் அருகில் சென்று படம் பிடித்தவர் இந்த லூக்கா நற்செய்தியாளர் ஆவார். முதல் இரு அதிகாரங்களில் (அத்தியாயங்களில்) இயேசுவின் வாழ்வில் மரியா கலந்திருப்பதை இயேசுவின் குழந்தைப்பருவ நிகழ்ச்சிகளில் அன்னை மரியா பங்களிக்கும் முறையினைப் பற்றி லூக்கா நற்செய்தியாளர் அழகாக எடுத்துரைக்கிறார். லூக்கா நற்செய்தி நூல் அடிப்படையில் பார்க்கிறபோது கிறிஸ்துவின் வாழ்வு எருசலேமில் தொடங்கி எருசலேமில் முடிவுறுகிறது. எனவே அன்னை மரியாவின் வாழ்வும் எருசலேமில் தொடங்குகிறது என்ற கருத்தை புனித அகஸ்டின் தெளிவுபடுத்துகிறார்.

**புனித அகஸ்டின் பார்வையில் லூக்கா நற்செய்தி**

லூக்கா 1:26-38 இறைவார்த்தை பகுதி புனித அகஸ்டினுக்கு மிகவும் பிடித்த பகுதியாக அவரது மறையுரை கருத்துக்கள் வழியாக தெரிகிறது. அன்னை மரியாவைப் பற்றி புனித அகஸ்டின் கூறும் கருத்துக்கள் எல்லாமே இந்த இறைவார்த்தையை மையப்படுத்தியே அமைகிறது. கிறிஸ்துவின் மறைபொருளை அன்னை மரியாவின் இறைபொருளோடு இணைத்து பார்க்கிறார் புனித அகஸ்டின். புனித அகஸ்டினின் கூற்றுப்படி அன்னை மரியாவின் வாழ்வும் பணியும் லூக் 1:26-38 லிருந்துதான் தொடங்குகிறது என்று கூறுகிறார். அன்னை மரியா தனக்கும் கடவுளுக்கும் உள்ள உறவை இந்த பகுதியிலிருந்துதான் தொடங்குகிறார் என்று கூறுகிறார்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பு பற்றிய அறிவிப்பு பகுதியான, இந்த இறைவார்த்தைப் பகுதி பழைய தமிழில் மங்கள வார்த்தை விழா என்று கொண்டாடப்பட்டது. புதிய மொழியாக்கத்தில் இயேசு பிறப்பின் முன்னறிவிப்பு விழா என்று உணர்த்தப்படுகிறது. கிறிஸ்துவின் பிறப்பு விழா நாட்களில் இருக்கும் நமக்கு இந்த இறைவார்த்தை பகுதியின் அடிப்படையில் புனித அகஸ்டின் கூறும் கருத்துக்கள் மிகவும் பயனுள்ளதாகும்.

**தெய்வீக விளையாட்டு**

விளையாட்டு அங்கு விளையாடுதல் என்ற வினைச் சொல்லின் அடிப்படை கருத்து. ஒருவர் சுதந்திரமாக தானாக விளையாடுவது அல்லது ஒருவர் மற்றவரோடு வியைாடுவது அல்லது ஒருவர் மற்ற குழுவோடு சேர்ந்து விளையாடுவது அல்லது ஒருவர் தன்னுடைய குழுவோடு சேர்ந்த மற்ற குழுவோடு சேர்ந்து விளையாடுவதாகும். மனிதர்கள் பொதுவாக மற்ற மனிதர்களோடு வியைாடிய விளையாட்டை புனித அகஸ்டின் அன்னை மரியாவின் வாழ்வில் நிகழ்ந்த இந்த





பாதிக்காது என்றும் கூறுகின்றார். அவரின் வார்த்தை மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்த வார்த்தை உயிருள்ளது, ஆற்றல் மிக்கது. இத்தகைய இறைவார்த்தையின் மீது நம்பிக்கை கொண்டு தம் வாழ்வை அர்ப்பணித்தவர் அன்னை மரியா. அவரது நம்பிக்கைப் பயணத்தை ஆழ்ந்து தியானிக்கும் போது நாம் வியப்பில் மூழ்குகிறோம். ஒரு இளம்பெண் இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையைத் தழுவிக்கொள்ளும் போது இறைவன் மீது மட்டுமே நம்பிக்கை கொண்டு, மாபெரும் மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற தன்னை முற்றிலுமாக கையளிப்பது மானுட வரலாற்றில் என்றும் போற்றப்படும் நிகழ்வாக அமைந்துள்ளது. எனவே தான் அவரது நம்பிக்கையை ஒரு நங்கூரத்திற்கு ஒப்பிடுகின்றோம். அவரிடமிருந்து இந்த அழகிய கிறிஸ்தவ புண்ணியத்தைக் கற்றுக் கொள்வோம்.

**மரியாவின் நம்பிக்கை**

உலகம் உருவாகுமுன்பே ஆதி பிதா சிந்தனையில் உருவானவர், கருவானவர் அன்னை கன்னி மரியா. எனவே தான் முதல் பாவம் உலகில் நுழைந்த போது அதனால் வரும் விளைவுகளைத் தடுத்து நிறுத்த ஒரு பெண் வழியாக வாழ்வு பிறக்கும் என்று ஏதேன் தோட்டத்தில் இறைவன் முழங்கினார். ‘உனக்கும் பெண்ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும். நீ அதன் குதிங்காலைக் காயப்படுத்துவாய் என்றார். (தொ. நூல் 3:15). மேலும் எசாயா இறைவாக்கினர் வாயிலாக ‘ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஓர் அடையாளத்தை அருள்வார். இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்ƒ அக்குழந்தைக்கு அவள் இம்மானுவேல் என்று பெயரிடுவார் (எசாயா 7:14) என்று உரைக்கின்றார். ஆம் கடவுளின் கண்களில் மரியா பேறுபெற்றிருந்தார். மீட்பரின் தாயாகும் பாக்கியம் கிடைக்குமுன்பே அவர் இறையன்பில் மூழ்கியிருந்தார். திருச்சட்ட நூல்களில் இன்பம் கொண்டிருந்தார். எனவே தான் ‘நான் ஆண்டவரின் அடிமை உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்’’ என்று துணிவுடன் மரியா கூறினார். இறைவார்த்தையின் மீது நம்பிக்கை கொண்டார். இறை வார்த்தை பொய்க்காது. அது வெறும் வார்த்தை மட்டும் அல்ல. அந்த வார்த்தையே இயேசு கிறிஸ்து. இம்மானுவேல். கடவுள் நம்மோடு. இந்தக் கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை.

ஒரு கன்னிப்பெண் திருமணத்திற்கு முன் தாயாகும் நிலையினால் தனக்கு திருச்சட்டம் தரவிருக்கும் தண்டனையை மரியா பெரிதாகக் கருதவில்லை. மாறாக, மானுட சமுதாயம் அடையவிருக்கும் விடுதலையை எண்ணித்தான் அவர் பெருமைப்படுகிறார். அந்த அரசியல், சமுதாய, பொருளாதார, சமய, பண்பாட்டு விடுதலையை அகக்கனவாக தனது பிறப்பிலிருந்து சுமந்தவர் அவர். இப்போது அந்தக் கனவை நனவாக்கும் நாயகனையும் உதரத்தில் சுமந்து கொண்டு யூதேய நாட்டிற்கு விரைந்து செல்கிறார். இறைவனில் நம்பிக்கை கொண்டோர் வாழ்வில் அவர் ஆற்றும் அதிசயங்களைக் காணச் செல்கின்றார். டேவிட் ஜெரமையா கூறுவார்: ‘மரியாவுக்கு இறைவன் மிகப்பெரிய பொறுப்பை வழங்கினார். இதன் வழியாக நாம் எல்லோரும் இறைவனின் கண்களில் பேறுபெற்றவர் ஆகுவதற்காக. கபிரியேல் வானதூதர் ‘ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்’’ என்று கூறினார். அதனால் அந்த ஆண்டவர் நம் அனைவரோடும் இருக்கிறார். எனவே கிறிஸ்மஸ் பரிசு மரியாவுக்கு மட்டும் கொடுக்கப்படவில்லை, நம் அனைவருக்கும் கொடுக்கப்பட்டுள்ளது. பரிசை நமக்கு டெலிவரி செய்தது மரியா. அவரை இயேசுவுக்குத் தாயாக தேர்ந்தெடுத்த போது இறைவன் மரியாவிடம் கண்ட தகுதிகள், அவரிடம் விளங்கிய தாழ்ச்சி. கீழ்ப்பதல், உறுதியான உள்ளம், நம்பிக்கை, தூய்மை என்னும் புண்ணியங்கள் ஆகும். ஆனால் இன்று இவைகள் உலகின் கண்களுக்குத் துச்சமாகத் தென்படுகின்றன. இப்பண்புகளை பயிற்சிப்போர் பலவீனர்களாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் இறைவன் முன் உயர்ந்தோராய் இருக்கின்றனர் என்பதை அவர் அறிவார்.

ஆயிரம் அலைகள் மோதினாலும் அசையாது, நகராது நங்கூரத்தின் கட்டுப்பாட்டினால் நிற்கும் கப்பலைப் போன்று மரியாவின் வாழ்வு இறைநம்பிக்கையில் வேரூன்றி இருந்தது. இறைவன் அவர் வாழ்வின் தொடக்கமும், நடுநாயகமாகவும், எல்லாமுமாக இருந்தார். இயேசுவின்

பிறப்புக்கு முன்பும், பிறப்பின் போதும், அதன் பிறகும் ஏராளமான துன்பங்கள், சோதனைகள் மரியாவைப் பின்தொடர்ந்தன. அவர் மனம் தளரவில்லை. மெசியாவின் தாய்க்கு இவ்வளவு இன்னல்களா என்று அங்கலாய்க்கவில்லை. 'இதோ உமது அடிமை'' என்று தனது உள்ளத்தின் ஆழத்தில் உரக்கக் கூறினார். தனக்கு நிகழ்ந்த அனைத்து நிகழ்வுகளையும் உள்ளத்தில் வைத்து தியானித்து பொக்கி'மாக அவற்றைப் பேணினார்.

தனது மகனின் உரையாடல் ஒவ்வொன்றும் அன்னையின் நம்பிக்கையை மேலும் மேலும் வளர்த்தெடுத்தது. அவரின் நம்பிக்கை ஒளிர்விட்டு தீபமாய் எரிந்தது. 'நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள். நான் என் தந்தையின் அலுவல்களில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' இந்த மகன் எனக்காக, என்னோடு காலமெல்லாம் இருப்பதற்காக அல்ல. அவரோடு சேர்ந்து நானும் இறையாட்சிப் பணிகளில் ஈடுபட சீடத்துவ வாழ்வை மேற்கொள்ள வேண்டும் எனும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டார். இறைவார்த்தையை கேட்டு அதன்படி நடப்பவர்களை எனது தாயும் சகோதர சகோதரிகளும் அவர் என்று கூறக் கேட்டபோது இன்னும் அதிகமாக அவருக்குப் பெண் சீடர்களை இனம் காட்டினார். பெண் சீடர் குடும்பத்திற்குத் தலைமை தாங்கினார். அந்த தலைமைப் பண்பு பெந்தக்கோஸ்துப் பெருவிழாவில் முழுமை அடைந்தது. 'உம்மைக் கருத்தாங்கி பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்'' என்று கூட்டத்திலிருந்து ஒரு பெண் குரலெழுப்பிக் கூறிய போது இயேசுவின் பதில் மொழி என்ன? 'இறைவார்த்தையைக் கேட்டு அதை கடைபிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்'' என்றார். தனது தாய் இறைவனுக்கும் தனக்கும் மிகப் பிரியமானவர். அதற்குக் காரணம் அவர் இறைவாத்தையின் மீது நம்பிக்கை கொண்டிருந்தார். இறைவார்த்தையின் வழி இறைவனின் குரலைக் கேட்டார். அக்குரலில் இறைத்திட்டம் வெளிப்பட்டது. இறைத்திட்டத்தை நிறைவேற்றுவதன் வழியாக நாம் இறைவனுக்கு ஏற்புடையவர்கள் ஆகிறோம் என்பதை மரியா நமக்கு இங்கு உணர்த்துகின்றார்.

**நிறைவுரை**

நாசரேத்து முதல் கல்வாரி மலை வரை மரியாவின் வாழ்வுப் பயணம் நம்பிக்கையில் வேரூன்றியதாய் இருந்தது. இறைமகன் துன்பங்களை அனுபவிக்கும் போது தனது இதயத்தை வாள்கள் ஊடுருவியதை அன்னை மரியா உணர்ந்தார். இறைவன் மீது நம்பிக்கை வளர மகனின் அர்ப்பணத்தின் மீதும் நம்பிக்கை வளர்ந்தது. மகனோடு அன்னையின் சீடத்துவமும் மலர்ந்தது. ஏழைகளுக்கான இறையாட்சி வந்துவிட்டது என்பதை கானாவூரில் உணர்த்தி நின்றார். திராட்சை இரசம் தீர்ந்துவிட்டது என்ற மரியாவின் கூற்றிற்கு இயேசு அளித்த பதில் அன்னையை பின்வாங்கச் செய்யவில்லை. மாறாக மரியா அங்கிருந்த பணியாளர்களிடம் 'அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்று துணிவுடனும் உரிமையுடனும் கூறினார். இறைவன் ஏழைகளுக்கு இரங்குவார் என்ற ஆழ்ந்த நம்பிக்கை அவரிடம் இருந்தது. நம்பிக்கையின் நங்கூரமாக இருக்கும் மரியா நமக்குக் கூறுவது என்ன? தாய்த் திருஅவையின் நம்பிக்கை ஆண்டின் இலட்சினையை உற்று நோக்க நம்மை அழைக்கின்றார். உலகின் நான்கு திசைகளிலிருந்தும் நாம் அனைவரும் ஒன்றாக இறையரசு முழுமையாக மலரும் என்ற எதிர்நோக்குடன் திருப்பயணத்தை மேற்கொள்கிறோம். நமது பயணத்தில் துன்ப துயரங்கள் என்ற அலைகளை நாம் சந்திக்க நேர்ந்தாலும் சிலுவை என்ற நங்கூரத்தின் மீது நம்பிக்கை கொண்டவர்களாய் நாம் தொடர்ந்து மகிழ்வுடன் பயணிக்கின்றோம். அந்த சிலுவை, நங்கூரம் போன்று நமது பயணக் கப்பலின் அடித்தளமாகவும், பாதுகாப்பாகவும் அமைந்துள்ளது. மகிழ்வோடு பயணிக்கின்றோம் என்பதன் அடையாளமே 'எதிர்நோக்கின் திருப்பயணிகள்'' என்று பச்சை நிறத்தில் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. எனவே மரியாவைப் போன்று இறைநம்பிக்கையில் வேரூன்றி இணைந்து பயணிப்போம். அது இனிதாக அமையும். தொடர்ந்து பயணிப்போம், இறுதிவரை பயணிப்போம். நமது திசை மாறாது. இலக்குகள் தெளிவாக இருக்கும். இறைவனில் வெற்றியை அனுபவிப்போம். தோழமை உறவுகளில் வலிமை கிடைக்கும். நமது கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படை நம்பிக்கை என்பதை உணர்வோம். நம்பிக்கையின் நங்கூரமான மரியா நமக்கு வழிகாட்டுவாராக!





மயங்கும் வேளையில் பயணிகள் எல்லோரும் ஒரு ஊரில் ஒன்று கூடுகிறார்கள். அவர்களுக்கு பேரதிர்ச்சி காத்திருக்கிறது. சேசு அந்தக் குழுக்களில் இல்லை. அன்னை மரியாவும் யோசேப்பும் திகைத்துப் போய் நிற்கிறார்கள். அவர் காணாமல் போனது தன்னுடைய கவனக் குறைவினால்தான் என்று அன்னை மரியாள் கூறுகிறார்கள். இல்லை இல்லை தன்னுடைய தவறினால் தான் என்று தன்னையே நொந்து கொள்கிறார் யோசேப்பு. ஆனால் யாரும் யாரையும் கடிந்து கொள்ளவே இல்லை. ஒவ்வொருவரும் பழியைத் தங்கள் மேல் ஏற்றுக் கொண்டு இருவரும் கலங்கி நிற்கிறார்கள்.

அன்னை மரியாவின் வியாகுலம்:

சேசு காணவில்லை என்றதும் தாயுள்ளம் பதறியது. பயணிகள் கூட்டத்தில் நன்கு தேடிப் பார்த்தார்கள். சேசு இல்லை. உடன் எருசலேம் நோக்கி இரவோடு இரவாகப் பயணம் மேற்கொண்டு கிளம்பினார்கள். சம்மனசுகளும் அன்னை மரியாவுக்கு பதில் கூறவில்லை. உரோமைப் படைவீரர்கள் சேசுவை பிடித்திருப்பார்களோ? அல்லது திருமுழுக்கு யோவானைக் காணப் பாலைவனத்திற்குச் சென்றிருப்பாரோ? அல்லது பெத்லகேம் மலைக் குகையை காணப் போயிருப்பாரோ? என்றெல்லாம் அன்னையின் உள்ளம் தடுமாறி கலங்குகிறது. தங்கள் தவறினாலேயே தமது அன்பு மகனைத் தவறவிட்டு விட்டோமே என்று இருவரும் இருதயங் கலங்கி அழுதுகொண்டே எருசலேம் முழுவதும் தேடுகிறார்கள்.

பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாவின் மூன்றாம் வியாகுலம்:

அன்னை மரியாவும் யோசேப்பும் காணாமல் போன சேசுவை மூன்று நாட்கள் தேடி களைத்து சோர்ந்து போனார்கள். தேவாலயத்தைத் தவிர மற்ற எல்லா இடங்களிலும் தேடினார்கள். ஞானத்தின் இருப்பிடமான அன்னை மரியாளுக்கு இந்த மூன்று நாட்களும் மிகவும் வியாகுலத்தைத் தந்த நாட்கள். சேசுவை காணாததால் அன்னை மரியாவால் சரியாக சிந்திக்க இயலவில்லை. தெளிவான முடிவு எடுக்க இயலவில்லை. நம்முடைய அன்றாட வாழ்வை மரியாவின் இந்த நிகழ்வுகளோடு ஒப்பிட்டு பார்ப்போம். பல நேரங்களில் வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் நாம் முடிவுகளை சரியாகவே எடுக்கிறோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நம்முடைய ஆன்மாவில் இறையருள் இல்லாதபோது அதாவது நாம் சாவான பாவநிலையில் இருக்கும் போது எடுக்கின்ற அனைத்து முடிவுகளும் கடவுளின் திருவுளத்திற்கு உகந்ததாக இருக்காது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே தான் பலநேரங்களில் பாவநிலையிலிருந்து நாம் எடுக்கும் முடிவுகள் நமக்கு மகிழ்ச்சி தருவதாக இல்லை. என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல. உங்கள் வழிமுறைகள் என் வழிமுறைகள் அல்ல என்கிறார் ஆண்டவர் (எசா:55:6) என்னும் இறைவார்த்தைக்கு ஏற்ப நம்முடைய சிந்தனைகளும் செயல்களும் கடவுளுக்கு விருப்பமானதாக அமைய நம்முடைய ஆன்மா இறையருள் நிலையில் நிலைத்திருக்க திருச்சபையின் அருட்சாதனங்களை பயன்படுத்துவோம். நம்முடைய எண்ணங்களையும் முயற்சிகளையும் நற்கருணை ஆண்டவரிடமும் வியாகுல மாமரியிடமும் ஒப்படைப்போம். வியாகுல மாமரி வழியாக ஆண்டவரின் அளப்பரிய ஆசீர்களைப் பெற்றுக் கொள்வோம்.

**வியாகுல மரியே வாழ்க!**



## பொதுநிலையினர் பார்வையில் அன்னை மரியாள் 3

திரு. தா.சுரேஷ், பூம்பொழில் நகர், சென்னை

அன்னை மரியாவின் இரண்டாம் வியாகுலத்தை, அன்னை மரியாவுடனும் புனித யோசேப்புடனும் குழந்தை சேசு உடனிருந்ததையும், அன்னை மரியாவின் எகிப்திய பயணத்திலும் எகிப்தில் வாழ்ந்த காலத்திலும் குழந்தை சேசு எவ்வாறு அவர்களுக்கு உதவியாக இருந்தார் என்பதையும் சிந்தித்த நாம் லூக்.2:41-52 வரை உள்ள இறைவார்த்தைகளில் விவரிக்கப்பட்ட அன்னை மரியாவின் மூன்றாம் வியாகுல நிகழ்வுகளை விசுவாச ஒளி கொண்டு சிந்திப்போம். திருக்குடும்பம் பாஸ்கா விழாவை கொண்டாட எருசலேமுக்கு பயணம் மேற்கொள்கிறார்கள். விழா முடிந்து திரும்பிய போது சிறுவன் சேசுவை காணவில்லை. இதனால் மனம் வருந்திய சேசுவின் பெற்றோர் சேசுவைத் தேடி மீண்டும் எருசலேம் செல்கிறார்கள். இத்தகைய இக்கட்டான நிகழ்வில் அன்னை மரியாள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்று சிந்திப்பது நம் ஆன்மீக வாழ்விற்கு மிகுந்த நலம் பயப்பதாக அமையும்.

திருக்குடும்பத்தின் எருசலேம் பயணம்:

சேசுவும் அன்னை மரியாவும், யோசேப்பும் நாசரேத்தூர் மக்களுடன் எருசலேம் நகருக்குப் பயணம் மேற்கொள்கிறார்கள். கடந்து போகுதல் விழாவாகிய பாஸ்கா விழாவில் கலந்து கொள்வதற்காக நாசரேத்தூர் மக்கள் அனைவரோடும் திருக்குடும்பமும் எருசலேம் நகர் செல்கிறார்கள். பெண்கள் தனியாகவும், ஆண்கள் தனியாகவும் பயணம் செய்வார்கள். இந்த பயணம் முழுவதும் நடைபயணம் தான். நாசரேத்தூரில் இருந்து எருசலேம் 85 மைல் தொலைவு நான்கு நாட்கள் நடைபயணம் முடித்து எருசலேம் வந்து சேருகிறார்கள். சேசு யூத முறைப்படி சட்டத்தின் பிள்ளையாக கருதப்படுவதற்கு பத்துபேர் கொண்ட மறைநூல் அறிஞர் குழுவால் சோதிக்கப்படுவதற்கு தயாராக இருக்கிறார். எருசலேம் நகர் முழுவதும் விழாக்கோலம் பூண்டுள்ளது. எங்கும் வசந்தகால மகிழ்ச்சியும் சமாதானமும் நிலவுகின்றன. திருவிழா நாட்கள் நல்ல முறையில் அமைந்தன.

நாசரேத்தூர் பயணம்:

எட்டுநாட்கள் திருவிழா நிகழ்வுகள் முடிந்ததும் எல்லோரும் தங்கள் ஊர்களுக்குப் பயணமானார்கள். பெண்கள் குழு முதலில் பயணம் கிளம்பினார்கள். ஆண்கள் குழு ஒருமணிநேர இடைவெளி விட்டும் கிளம்பினார்கள். ஆனால் சேசு கிளம்பவில்லை. ஆலயத்திலேயே தங்கிவிட்டார். அன்னை மரியாள் சேசு ஆண்களின் குழுவோடு வருவார் என்று எண்ணியிருந்தார்கள். யோசேப்போவெனில், சேசு வழக்கம் போன்றே அன்னை மரியாளோடு பயணம் சென்றிருப்பார் என்று எண்ணிக் கொண்டே பயணம் செய்து வந்தார். ஒருநாள் பயணம் முடிந்து மாலை

ஆகட்டும்





# அன்னையின் 73 திருத்தலங்களை நோக்கி...

அருள்பணி. சகாயராஜ் ம.ஊ.ச., இத்தாலி.



## பாரீஸ் நகர அன்னை Notre-Dame de Paris பகுதி II

பாரீஸ் நகரத்து பொற்கொல்லர்கள் கி.பி. 1499ஆம் தொடங்கி கி.பி. 1708ஆம் ஆண்டு வரை பல்வேறு புகழ்பெற்ற ஓவியங்களையும், கலைபொருட்களையும் ஆலயத்திற்கு காணிக்கையாக வழங்கிவந்தனர். இக்காலக்கட்டத்தில் மொத்தம் 76 ஓவியங்கள் மற்றும் கலைபொருட்கள் வழங்கப்பட்டன. அவை அனைத்தும் புகழ்பெற்ற ஓவியர்களாலும், கலைவிற்ப்பர்னர்களாலும் உருவாக்கப்பட்டவையாகும். பிரெஞ்ச் புரட்சிக்கு பிறகு, கி.பி. 1793ஆம் ஆண்டு இக்கலைப் பொக்கிசங்களில் பெரும்பாலாவை, இப்பேராலயத்திலிருந்து எடுக்கப்பட்டு, பிரான்சில் பல்வேறு அருங்காட்சியகங்களுக்கு அனுப்பப்பட்டது. மீதமிருந்த ஓவியங்கள் கி.பி. 1844ஆண்டு முதல் கி.பி. 1864ஆம் ஆண்டு வரை நடைபெற்ற ஆலய புதுப்பித்தல் பணிகளின் போது அகற்றப்பட்டு ஆலயத்தில் உள்ள அருகாட்சியகத்து அனுப்பட்டன. இப்பேராலயத்தில் 13 ஓவியங்கள் மட்டும் எல்லோரின் பார்வைக்கும் வைக்கப்பட்டிருந்தன. அவைகள்:

1. தூய ஆவியார் திருத்தூதர்கள் மேல் இறங்கி வருதல்
2. புனித பேதுரு நோயுற்றவரை குணமாக்குதல்
3. புனித பவுலின் மனமாற்றம்
4. புனித பேதுருவும் கொர்னேலியுவின் குடும்பமும்
5. புனித பேதுரு எருசலேம் நகரில் போதித்தல்
6. புனித பேதுருவின் சிலுவை மரணம்
7. புனித அந்திரேயாவின் சிலுவை மரணம்
8. புனித பவுல் போலி இறைவாக்கினரை பார்வையிழக்கச் செய்து படைத்தளபதி செர்சியுஸை மனம்மாற செய்தல்
9. புனித எதின்னே கல்லெறியப்படல்

ஆகட்டும்

10. புனித பவுலும், சீலாவும் சாட்டையடிப்படுதல்
11. எருசலேம் நகரில் புனித பவுல் படப்போகும் துன்பங்களை முன்னறிவித்தல்
12. செகாவின் மகன்கள் பேயினால் தாக்கப்படுதல்



இந்த 12 ஓவியங்களும் 2019ஆம் இப்பேராலயத்தில் ஏற்பட்ட தீவிபத்தின் போது, தீயணைப்பு வீரர்கள் நீர்பீச்சியடித்த போது, ஓரளவு பழுதடைந்து விட்டன.

இப்பேராலயத்தின் முகப்பில் இருக்கும் கோபுரங்கள் 69 மீட்டர் (226 அடி) உயரம் உடையதாகும். கி.பி. 1889ல் எபில் கோபுரம் உருவாக்கி முடியும் வரை இந்த ஆலயக்கோபுரங்களே, பாரீஸ் நகரின் உயர்ந்த கோபுரங்களாக விளங்கின. இக்கோபுரங்கள் ஆலயத்தின் வட புற கோபுரங்கள் என அழைக்கப்படும். இக்கோபுரங்களுக்கு இடையில் தாமிரத்தாலான நீர் தொட்டி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்தொட்டி நீரானது தீ விபத்து ஏற்பட்டால் தீயை அணைப்பதற்காக உருவாக்கப்பட்டதாகும். இக்கோபுரத்தின் முகப்பு







அவர் தந்தது வெறும் வார்த்தை மட்டுமல்ல, வார்த்தையை பிரதிபலிக்கும் வாழ்க்கையையும்தான்.

**செயலில் மிளிர்ந்த புத்திசாலித்தனம்**

செயல்கள்தான் நம் புதத்திக்கூர்மையைப் பிறருக்கு அறிவிக்கின்றன. மரியாவின் செயல்கள் ஒவ்வொன்றுமே அவரின் புத்திக் கூர்மையை பிரதிபலிக்கும் கண்ணாடிகள்தான். சில செயல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

செயல் 1: கணவர் சூசையோடு சேர்ந்து மரியா குழந்தை இயேசுவை காப்பாற்ற நாசரேத்திலிருந்து எகிப்துக்கு எல்லா சிரமத்தின் மத்தியிலும் பயணம் செய்தது.

செயல் 2: இயேசுவின் வளர்ப்பில் மிகவும் அக்கறை கொண்டு செயல்பட்டது. கிறிஸ்து ஞானத்திலும் வளர்ந்தார். இது இறையியல்பில் செய்யப்படவில்லை. கடவுள் ஞானத்திலும் அறிவிலும் இருப்பது ஒன்றும் புதிதல்ல. இயேசு ஞானத்திலும் அறிவிலும் வளர்ந்தார் என்பது மனித இயல்பிலேதான். இயேசு எனும் மனிதரைப் பெற்றெடுத்து வளர்த்து மரியாவின் பங்கு மிகப்பெரியது.

செயல் 3: இயேசுவின் நான் தந்தையின் இல்லத்தில் அவருடைய அலுவல்களில் ஈடுபட வேண்டும் என்ற வார்த்தைகளை மரியா சரியான விதத்தில் புரிந்து கொண்டார். தாய் என்ற நிலையில் காணாமல் மறைந்திருந்த உண்மையை, நடைமுறையை உணர்ந்தார், புரிந்தார். அதுமுதல் வாழவும் முற்பட்டார். இதற்கெல்லாம் அவருக்கு கடவுள் அருளிய புத்திக்கூர்மை உதவி செய்தது.

செயல் 4: முதல் அற்புதம், திராட்சை இரசம் தீர்ந்து விட்டது. என்ன செய்வதென்று தெரியாமல் இருந்த திருமண வீட்டாருக்கே தெளிவு பிறப்பித்தது மரியாவின் செயல்தான். அப்படி என்ன செய்தார்? இயேசுவை அணுகினார். சாதாரண செயல்தான் அதிசயம் தந்தது. புத்திசாலித்தனம் என்பது அறிவை நடைமுறைப்படுத்துவது ஆகும். நிறைய நேரங்களில் நாம் அறிவு ஜீவிகளாக இருந்தாலும் புத்திசாலிகளாக இருப்பதில்லை. அன்னை மரியா நமக்கெல்லாம் ஒரு மாதிரியாக இருக்கிறார்.

புத்திக் கூர்மை என்ற புண்ணியமற்ற புண்ணியங்களுக்கு எடுத்து செல்லும் ஒரு சாதனம் என்பது மரியாவின் வாழ்வில் தெளிவாகிறது. எப்படியெனில் தன் தெரிவு செய்தலால், வார்த்தையால், செயல்களால் என அவர் வெளிப்படுத்திய புத்திக்கூர்மை அவர் கொண்டிருந்த ஏனைய புண்ணியங்களைப் பற்றியும் சிந்திக்க வைக்கிறது. குறிப்பாக அவர் கடவுளில் கொண்ட விசுவாசம், அன்பு, நம்பிக்கை. ஆகவேதான் மரியாவை கன்னிகை என அழைக்கிறோம்.

தனக்கு மட்டுமே இயேசு செய்தார் என ஒருபோதும் உரிமை பாராட்டி நிற்கவில்லை மாறாக தந்தையான கடவுள் ஒப்புவித்த பணியைச் செய்ய அவர் இயேசுவைத் தாரைவார்க்க வேண்டியிருப்பதை உணர்ந்ததோடு மட்டுமில்லாமல் உயர்ந்து நிற்கிறார்.

**மரியா – புத்திக்கூர்மை**

புத்திக்கூர்மை என்பது தெரிவு செய்யும் தன்மையில் வெளிப்படுகிறது. பேசும்விதத்தில் வெளிப்படுகிறது. செய்யும் செயல்களில் மிளிர்கிறது மரியாவின் புத்திக்கூர்மையும் இவைகளில் எல்லாம் தெளிவாக தெரிகிறது.

**தெரிவு செய்தல்**

வானதூதர் மரியாவிடம் நீ கடவுளின் மகனைப் பெற கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டவர் நீர் என்று சொன்னபோது நிச்சயம் இளம் மங்கையான மரியா கலக்கமுற்றிருக்க வேண்டும். இந்தக் கலக்கத்தை இது எங்ஙனம் ஆகும் என்று கூட வினவித் தெளிவு பெறுகிறார். இவர் தெளிவு பெற வானத்தூதரின் விளக்கம் மட்டுமல்ல, கடவுள் கொடையாய் மனிதருக்குத் தந்த புத்தியும் உதவியது என்பது இங்கு மிகவும் பொருத்தமாகிறது.

கடவுள் தன் படைப்பு திறனிலே மனிதருக்கு மட்டும் புத்தியும் சுதந்திரமும் கொடுத்திருக்கிறார். அவ்வாறு கொடையாக கொடுக்கப்பட்ட சுதந்திரத்தையும் புத்தியையும் மரியா தக்கநேரத்தில் சரியான விதத்தில் பயன்படுத்துகிறார் என்பது தெளிவுறுகிறது.


**வார்த்தையில் மரியின் புத்திசாலித்தன்மை**

கொம்பு கொண்டு மாடு பிடிப்பவர் சொல்லைக் கொண்டு மனிதர்களைப் பிடிக்கலாம் என்ற பழமொழி உண்டு. இது நடைமுறை உண்மையாகவும் இருக்கிறது. ஒருவருடைய சொல்லை வைத்து அவருடைய எண்ண ஓட்டம், புத்திக்கூர்மை, வெளிப்படுத்தும் விதம் போன்றவற்றை அறிகிறோம் இது மரியாவிடத்தில் அதிகமாக வெளிப்பட்டது என்றால் மிகையல்ல.

மரியா வானதூதரிடம் சொன்ன வார்த்தை உம் வார்த்தையின்படியே ஆகட்டும் என்பது இதற்கு அருமையான உதாரணம். தனது பெற்றோரிடம் கேட்டு பதில் சொல்லவில்லை. மாறாக கடவுள் தனக்கு கொடுத்த அறிவையும் புத்திசாலித்தனத்தையும் பயன்படுத்தி பதில் தந்தார். அந்த பதில் சாதாரண பதில் இல்லை. மிகவும் சிறந்த ஒப்பில்லாத பதில் காரணம் அவர் தந்த புத்திசாலித்தனமான வார்த்தையின் வெளிப்பாட்டில்தான் மனித மீட்பு சாத்தியமாயிற்று. மனித மீட்புக்காக கடவுள் மனித உருவில் மனித வரலாற்றில் பிறக்க பேருதவி புரிந்தது. மரியாவின் வார்த்தை பேறுபெற்றது என்றாலும் தகும்.







மக்களை விசுவாச வாழ்வில் வழி நடத்தும் சிறந்த மறைக்கல்வி போதனை களமாக அமைந்து, □ஏழை மக்களின் புத்தகம்□ என்றழைக்கப்படுகிறது. இந்த நுழைவு வாயிலின் மையப் பகுதியில் விவிலிய நிகழ்வுகளும், குறிப்பாக இறுதி தீர்வையும் வடிக்கப்பட்டுள்ளது. இதில் பாவிகள் நகரத்திற்கும், நல்லவர்கள் விண்ணகத்திற்கும் அழைத்துச் செல்லப்படுவது செம்மையாக வடிவமைக்கப்பட்டுள்ளது. வலது புற நுழைவாயிலின் மேல் அன்னை விண்ணக, மண்ணக ராக்கினியாக முடிசூடப்படும் நிகழ்வும், இடது புற நுழைவாயிலில் பாரீஸ் நகர மக்கள் விரும்பிய புனிதர்களும் குறிப்பாக அன்னை மரியாவின் தயாகிய புனித அன்னாளின் உருவங்களும் வடிக்கப்பட்டுள்ளன.

ஆலயத்தின் பீடத்தின் மேல் இருக்கும் ஊசி கோபுரம் மற்றொரு புகழ்வாய்ந்த கட்டி கலைக்கு சான்றாக அமைந்த அமைப்பாகும். இக்கோபுரத்தை சுற்றி தாமிரத்தால் வடிவமைக்கப்பட்ட 12 திருத்தூதர்களின் உருவங்கள் வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, திருத்தூதர் தோமையார் பாரீஸ் நகரை நோக்கி இருப்பதாக அமைக்கப்பட்டுள்ளார். மேலும், நான்கு நற்செய்தியாளர்களை குறிக்கும் நான்கு அடையாளங்களும் பொறிக்கப்பட்டுள்ளன. இதன் உச்சில் கூவும் சேவல் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்சேவலுக்குள், இயேசுவின் முள்முடியில் இருந்த ஒரு முள்ளின் சிறுபகுதி, பாரீஸ் நகரின் பாதுகாவலர்களான புனித டெனிஸ் மற்றும் புனித ஜெனவிவே ஆகியோரின் அருளிக்கங்கள் என மூன்று அருளிக்கங்கள் கி.பி. 1935 ஆம் ஆண்டு பேராயர் ஜீன் வெர்தியர் அவர்களால் வைக்கப்பட்டன.



கி.பி. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் 15ஆம் தேதி மாலை ஏற்பட்ட தீ விபத்தில் இப்பேராலயம் பெரும் பாதிப்புக்குள்ளானது. வானுயர்ந்த நின்ற ஊசி கோபுரம் முழுமையாய் அழிந்தது. ஆனால், அந்த அழிவுக்குள் ஒரு அதியம் காத்திருந்தது. கனன்று கொண்டிருந்த சாம்பல்களுக்கிடையில் கோபுரத்தின் உச்சியில் இருந்த சேவல் சிறு சேதங்களோடு தப்பித்தது. அதற்குள் இருந்து மூன்று அருளிக்கங்களும் எந்த பாதிப்பும் இல்லாமல் முழுமையாய் இருந்தது. ஆலயத்தில் இருந்த கண்ணாடி ஜன்னல்கள் சேதமடைந்தன. அப்போது அங்கு நடைபெற்று கொண்டிருந்த புனரமைப்பு பணிகளிலிருந்து இருந்த ஒரு மின்கசிவின் காரணமாக இப்பெரும் தீ விபத்து ஏற்பட்டது. மாலை 6 மணியளவில் ஏற்பட்ட தீயானது பெரும் போராட்டங்களுக்கிடையே 9.45 மணியளவில் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அங்கிருந்த பைப் ஆர்கன் முதலியவை சிறு சேதங்களோடு காப்பாற்றப்பட்டது. இனிமேல் அந்த ஆலயத்தை பயன்படுத்த முடியுமா என்ற கேள்விகளோடு பிரான்சு தேசமே கண்ணீரில் சிக்கித் தவித்தது. தேசிய சின்னமான அப்பேராலயம் அதன் பழமை குன்றாமல் புனரமைக்கப்படும் என்ற அரசாங்கத்தின் அறிப்பு எந்தவித எதிர்ப்புகளும், சர்சைகளும் இல்லாமல் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஆலய கட்டுமானத்திற்கு தேவையா ஓக் மரங்கள் பிரான்சு தேசத்தின காடுகளிலிருந்து வெட்டப்பட்டு பதப்படுத்தபட்டன. இம்மரங்கள் நூற்றாண்டுகள் பழமையானதாகும். வெட்டப்பட்ட மரங்களுக்கு பதிலாக புதிய மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படுகிறது. 2024ஆம் ஆண்டுக்குள் பேராலய புனரமைப்பு பணிகள் நிறைவுபெற்று பொதுமக்களின் பார்வைக்கும், வழிபாட்டிற்கும் திறக்கப்படும் என பிரெஞ்ச் அரசாங்கம் அறிவித்துள்ளது.

பழமை மாறாமல் புதுப்பிக்க பேராலயமானது 2024ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் தேதி அர்ச்சிக்கப்பட்டு, பொதுமக்கள் வழிபாட்டிற்கு திறக்கப்பட இருக்கிறது. வீழ்வோம் என்று நினைத்தாயோ என்ற பாரதியின்





# மாதா மன்றாட்டு மாலை



15

அருள்பணி. லூர்துசாமி ம.ஊ.ச.
நவதுறவியர் இல்லம், மாமல்லபுரம்.

## மகா புத்தி உடைத்தான கன்னிகையே

புண்ணியங்களில் ஒன்று புத்திக் கூர்மை அவையாவன நீதி, மனவலிமை, தன்னடக்கம், புத்திக்கூர்மை அல்லது முன்யோசனை அல்லது விவேகம். இது ஏன் முக்கியமாக கருதப்படுகிறது என்றால் இந்தப் புண்ணியம் மற்றப் புண்ணியங்களுக்கு வழிகாட்டும் ஒரு சாதனமாக இருக்கிறது. வாசகர்களின் சொல் அகராதி நிலைப்பாடு, நடைமுறை ஞானம் என்பவற்றின் தரம், தன்மை என புத்திக்கு வரையறை கொடுக்கிறது. இந்த புத்திக் கூர்மையை அரிகா விர்த்தும் என விளக்குகிறது. அதற்கு புண்ணியங்களின் ஓட்டுநர் என்பது பொருள்.

## விவிலியத்தில்

புத்திதான் நம்முடைய செயல்களை தீர்மானிக்கிறது, வழிநடத்துகிறது. குறிப்பாக நிறைய வாய்ப்புக்கள் இருக்குமிடத்தில் நம் புத்திதான் எது தேவை எது தேவையில்லை எனத் தீர்மானிக்கிறது. புத்திக்குறைவு அழிவு. அதே சமயத்தில் புத்தி உள்ளவர்கள் பேறுபெற்றவர்கள். எடுத்துக்காட்டாக யாக்கோபிடம் ஏசா தனது பிறப்புரிமையை விற்றது.(தொ.நூ 25.29) யாக்கோபு 12 குலங்களின் தகப்பனிடத்தில் ஆசி பெற சென்றார். ஏசா ஆசியே பெறாமல் போனார் தன்னுடைய புத்திக்கூர்மையின்மையால். தாவீது, கோலியாத்து இவன் தன்னுடைய புத்திக் கூர்மை குறைபாட்டால் தாவீதின் செயலை குறைத்து எடை போட்டான். கடைசியில் எழமுடியாமல் வீழ்ந்தான். இறுதியாக சாலமோனின் வேண்டல் ஞானத்திற்கான வேண்டல்.

ஆனால் மரியாவுக்கு மட்டுமே உடைத்தாள் அடைமொழிதான் மகா புத்தியுடைத்தான கன்னிகையே. யாருமே அன்னையைப் போல தெரிவு செய்வதில் சிறந்து விளங்க முடியாது என்பதற்கு இயேசுவின் முன்னறிவிப்பு ஓர் உதாரணம் எனலாம். லூக் 1.38-ல் உமது வார்த்தையின்படி எனக்கு ஆகட்டும் என தெளிந்த மனதோடு தன் வாழ்வை தெரிவு செய்தவர். மரியாவின் பங்கு இயேசுவின் பணியில் தெளிவாக படம்பிடித்துக் காட்டப்படுகிறது. இதனால் அவருடைய புத்தி எண்பிக்கப்படுகிறதென்றால் அது ஒருபோதும் மிகையல்ல. இயேசுவை மரியா பெற்றெடுத்து வளர்த்தாலும்கூட



# முத்திப்பேறு மரியா குவாடலூப் OSM



அருட் சகோ. பிலிப் ஜோஸப் ம.ஊ.ச

மரியா குவாடலூப் ரிகார்ட் 1881 பிப்ரவரி 23 அன்று வெலென்சியாவின் ஆல்பல் என்ற இடத்தில் பெற்றோர்களான பிரான்சிஸ்கோ ரிகார்ட் மற்றும் மரியா ஆகியவர்களுக்கு பிறந்தார். அவர்கள் எளிய விவசாயிகள் ஆவார். நான்கு வயதில் மரியா குவாடலூப் தந்தையை இழந்தார் இருப்பினும் அவர் குழந்தை பருவமும் இளம் பருவமும் அமைதியானவையாக அமைந்தன. பதினொன்றாம் வயதில் முதல் நற்கருணை பெற்ற திருப்பலியில், அவருடைய பங்குத் தந்தை வின்சென்சோ கேட்டார், "இறைவனுக்கு தங்களை முழுமையாக அர்ப்பணிக்க யாராவது தயாரா?" என்ற கேள்விக்கு மரியா குவாடலூப் உடனடியாக "நான் விரும்புகிறேன்" என்று பதிலளித்தார். 1896 ஜூன் 11 அன்று மரியா குவாடலூப் வெலென்சியாவின் "பி டி லா க்ரூஸ்" என்ற மரியின் ஊழியர் மடத்தில் ஒரு புதிய துறவியாக சேர்க்கப்பட்டார். 1900 ஜூன் 19 அன்று, அவர் இறுதி வார்த்தைப்பாட்டை எடுத்தார். மடத்தில் அவர் பல பணி பொறுப்புகளை ஏற்றார். அவர் எளிமை மற்றும் தியான வாழ்க்கையின் முக்கியத்துவங்களை கற்பிப்பதிலும் அதை கடைபிடிப்பதிலும் மிகவும் ஆர்வம் காட்டினார். அவர் கிறிஸ்துவின் பாடுகளையும் அன்னை மரியாளின் துன்பங்களையும் தொடர்ந்து தியானித்து தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொண்டார். ஸ்பெயின் நாட்டில் உள்நாட்டுப் போர் தொடங்கியபோது, கிறிஸ்தவர்களுக்கு எதிராக பல கொடுமைகள் நடக்க தொடங்கின. கிறிஸ்துவுக்காக தன் உயிரைத் தருவதற்கும் அவர் தயாராக இருந்தார். "நாமும் தியாகங்கள் செய்து அர்ப்பணிப்போம்" என்று தன்னுடைய புதிய துறவியர்களை அவர் உற்சாகப்படுத்தினார். 1936-ம் ஆண்டில் மிலிஷியா குழுவினர் அவரையும் அவரது சக சகோதரிகளையும் மடத்திலிருந்து வெளியேற்றினர். தற்காலிகமாக உறவினர் வீட்டிலும் பின்னர் அவரது சகோதரியின் வீட்டிலும் தங்கி, அவர் பாவிகளின் மனமாற்றத்திற்க்கும் கத்தோலிக்க விசுவாசத்தின் நிலைத்தன்மைக்காகவும் தொடர்ந்து இறைவேண்டல் மேற்கொண்டார். 1936 அக்டோபர் 2 அன்று, இரவில் ஒரு குழுவினர் அவரது வீட்டைச் சூழ்ந்து விசாரணை செய்தனர். அவர் துறவியென்று அவர்களிடம் உறுதியாக ஒப்புக்கொண்டார். "நான் துறவி, ஆயிரம் முறை பிறந்தாலும் ஆயிரம் முறை இதே வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பேன்" என்று உறுதியுடன் தெரிவித்தார். பின்னர் அவர்கள் அவரை ஊருக்கு வெளியில் அழைத்துச் சென்று கொன்றனர். பயணத்தின் போது, மரியா குவாடலூப் தனது கொலைகாரர்களுடன் அமைதியாக பேசினார். அவர், □நீங்கள் என்னை பரலோகத்தின் கதவுகளைத் திறக்க செய்கிறீர்கள்,□ என்று கூறி, அவர்களை மன்னித்தார். அவர் ஒரு துறவி என்பதையே காரணமாகக் கொண்டு அவரை கொன்றனர் . அவரது உடலை அவர்கள் கொடுமையாக சிதைத்தனர். இது இறந்த உடல்களை அடையாளம் காண வைத்த நீதிமருத்துவ நிபுணர் எடுத்த சில புகைப்படங்களில் தெளிவாக காணப்படுகிறது. மரியா குவாடலூப் அவர்களின் உடல் பொதுவான சுடுகாட்டில் அடக்கம் செய்யப்பட்டது. போருக்கு பின்னர் அவரை மடத்தின் கல்லறையில் இடம் மாற்றினர். 1999-ல் இரண்டாம் ஜான் பால் அவரது தியாகத்தை அறிந்து முத்திப்பேறு பட்டம் அளித்தார்.





சொற்களுக்கு விடைதரும் வண்ணமாய் வானுயர மீண்டும் எழுந்து நிற்கும் இப்பேராலயம் ஆண்டவரின் அற்புத செயலுக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.



திருப்பயணம் தொடரும்..........





**ஆகட்டும் இதழின் வாசகராகிய இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக ஜெபிப்போம். ஆகட்டும் இதழ் குழுமத்தின் சார்பாக இவரது குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கிறோம்.**

# விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி
## II குறிப்பேடு



ச. பெ. அமல்ராஜ். ம.ஊ.ச.பொ.நி, திருச்சி - 21




**வலமிருந்து இடம்**

1) அங்கே இருந்த சபையார் ........... சாலமோனுடன், கிபயோனிலிருந்த தொழுகை மேட்டுக்குச் சென்றனர். ஏனெனில் ஆண்டவரின் அடியார் மோசே பாலை நிலத்தில் செய்த கடவுளின் சந்திப்புக் கூடாரம் அங்கே இருந்தது.

4) ஆண்டவரின் மாட்சி அவர் இல்லத்தை நிரப்பியிருந்ததால், குருக்கள் அண்டவரின் .......... நுழைய முடியவில்லை.

5) செல்வத்திலும் ஞானத்திலும் அரசர் சாலமோன் ........... மற்ற மன்னர்களைவிடச் சிறந்து விளங்கினார்.

8) மேலும், லெபனோலிருந்து கேதுரு மரங்கள், தேவதாரு மரங்கள், வாசனை மரங்கள் ஆகியவற்றை நீர் எனக்கு அனுப்பிவையும். ஏனெனில் உம் பணியாளர் லெபனோனின் மரங்களை வெட்டுவதிலும் திறமைமிக்கவர் என நான் ............

9) உலகம் அனைத்தையும் ஆண்டவரின் கண்கள் கழன்று பார்க்கின்றன. அவர் தம்மை முழு மனத்துடன் நம்பும் அனைவர்க்கும் ஆற்றல் ............

10) யோத்தாமின் பிற செயல்களும், அவனுடைய எல்லாப் ......... அவன் வழிமுறைகளும் இஸ்ரயேல், யூதா அரசர்களின் குறிப்பேட்டில் எழுதப்பட்டுள்ளன.

12) அங்கிருந்த மக்கள் பாஸ்காப் பலிக்கென அவர்களின் எண்ணிக்கைப்படி. செம்மறி ஆட்டுக்குட்டிகளும் வெள்ளாட்டுக் குட்டிகளுமாக மொத்தம் முப்பதாயிரமும், காளைகள் மூவாயிரமும் .......... யோசியா, தம் உடைமையிலிருந்து அளித்தார்.

**இடமிருந்து வலம்**

2) கடவுளின் இல்லத்தைக் கட்டுமாறு சாலமோன் இட்ட .......... அக்கால அளவின்படி, அறுபது முழ நீளமும் இருபது முழ அகலமும் கொண்டதாயிருந்தது.

3) ஆதலால் என் தந்தையும் உம் ஊழியனுமான தாவீதுக்கு அளித்திருந்த வாக்குறுதியை நீர் நிறைவேற்றியுள்ளீர். உம் வாயினால் வாக்களித்ததை உம் கையினால் ............ நிறைவேற்றியுள்ளீர்.





அவரோடு ஒன்றாவோம். அதற்காக இணைவோம் அவர் பிள்ளைகளாக இத்திருப்பலியில்.

### முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் மலாக்கி, நீங்கள் தேடுகின்ற தலைவர் ஆலயத்தை தேடி திடீரென்று வருவார், தூய்மைப்படுத்துவார். மனிதனின் பாவத்தால் புனிதம் இழந்த ஆலயத்தை விட்டு வெளியேறிய இறைவன், இன்று மனிதமாக ஆலயத்தை பலிப்பீடத்தை, குருத்துவத்தை மற்றும் தன்மக்களை தூய்மைப்படுத்த நுழைகின்றார். நம்மை தேடி வரும் நம் ஆண்டவரை வரவேற்போம், அவரில் நம்பிக்கை கொள்வோம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

பாலன் இயேசுவை தந்தை கடவுளின் மீட்பு திட்டத்தின் உச்சக்கட்டமாக கல்வாரி மலையில் தன்னை எல்லோரின் மீட்புக்காகவும் பலியாக ஒப்புக்கொடுக்கும்போது புதிய உடன்படிக்கையின் தலைமை குருவாக புனித பவுல் அடிகளார் அறிவிக்கின்றார். நமது மீட்புக்காக தம்மையே அர்ப்பணித்த பாலன் இயேசுவை போல நாமும் திருஅவையின் வளர்ச்சிக்காகவும் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்ற நம்மையே தியாக பலியாக ஒப்புக்கொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. படைப்பின் நாயகனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உமது அழைப்பின் மேன்மையை உணர்ந்து தாங்கள் அழைக்கப்பட்ட நிலையிலிருந்தே உமக்கு சாட்சிய வாழ்க்கை வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் இறைவா! திருமுழுக்கின் வழியாக இறைவாக்கினர்களாக வாழ அழைக்கப்பட்ட நாங்கள் அனைவரும் நீதி நியாயம் நிறைந்த சமத்துவ உலகைக் கண்முன் கொண்டு அதை உருவாக்கும் பணியில் ஈடுபட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. கருணையின் ஊற்றே இறைவா! எங்களிடையே இருக்கும் இறுமாப்பு, பொறாமை, கட்சி மனப்பான்மை இவற்றை உதறித் தள்ளிவிட்டு அன்பின் அனைத்துப் பண்புகளையும் கொண்டு வாழ துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. 'அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு' என்ற கூறிய அழைத்தலின் நாயகனே எம் இறைவா! திருஅவையில் இறையழைத்தல் பெருகவும், அழைப்பில் இருப்பவர்கள் அனைவரும் பிரமாணிக்கத்தோடு வாழவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. வார்த்தை மனுவான இறைவா! கிறிஸ்தவர்களாகிய நாங்கள் அனைவரும் உம் வார்த்தையை தினமும் வாசித்து, அதை தியானித்து, அதன்படி எங்களது வாழ்க்கையை செயல்படுத்த உமது ஞானத்தையும் அருளையும் நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. வரங்களைப் பொழியும் வள்ளலே எம் இறைவா! திருப்பலியில் பங்கேற்கும் இறைமக்களாகிய நாங்கள் அனைவரும் நற்கருணை வழிபாட்டுக்குக் கொடுக்கும் அதே முக்கியத்துவத்தை இறைவார்த்தை வழிபாட்டுக்கும் கொடுத்து இதனால் எங்கள் வாழ்க்கை உமது வார்த்தையை அடித்தளமாகக் கொண்டு உமது அருளையும் ஆசியையும் அனுதினமும் அனுபவிக்கத் தேவையான அருள்வரங்களைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. Q hd j j pd ; C wNw v k; , i wt h! 'உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்' என்ற அன்னை மரியாவை போல நாங்களும் எங்கள் வாழ்வில் வருகின்ற ஒவ்வொரு நிகழ்வையும் உமது இறைத்திட்டமாக ஏற்று வாழத் தேவையான அருளைத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் (௦௨-௦௨-௨௦௨௫)

### மலாக்கி ௩:௧-௪; எபிரேயர் ௨:௧௪-௧௮; லூக் ௨:௨௨-௪௦

### திருப்பலி முன்னுரை

இறையேசுவில் அன்பார்ந்த இறைமக்களே, இன்று திருஅவை ஆண்டவரைக் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணித்த விழாவினைக் கொண்டாடுகின்றது. இவ்விழா ஆண்டவரின் பாடுகள், இறப்பு மற்றும் உயிர்ப்பின் மறைபொருளின் நிறைவை வெளிப்படுத்துகின்ற ஒரு நிகழ்வாக அமைகின்றது. இவ்விழா சந்திப்பின் விழா என்றும் அழைக்கப்படுகின்றது. ஏனெனில் புதிய ஏற்பாட்டின் பிரதிநிதியாக பாலன் இயேசுவும், பழைய ஏற்பாட்டின் பிரதிநிதியாகிய தந்தை கடவுளும் சந்திக்கின்றனர். தந்தையின் இறைத்திட்டம் வெளிப்படுத்தப்படுகிறது. கிறிஸ்துபிறப்பு விழா தானே இறைவன் மனிதத்தோடு ஒன்றானது என நாம் நினைக்கலாம். இல்லை மாறாக 4-ஆம் நூற்றாண்டிலிருந்தே பாலன் இயேசு காணிக்கையாக கொடுக்கப்படும் திருவிழா நினைவுகூர்ந்து கொண்டாடப்பட்டது.

பாலன் இயேசு இறைவனது திட்டத்தை செயல்படுத்த தம்மையே முழுமையாக அர்ப்பணித்ததுபோல நாமும் இறைவனது விருப்பம் நம்மிலும் இவ்வுலகிலும் நிறைவுபெற நம்மையே அர்ப்பணித்து வாழ முயல்வோம். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக ஆலயத்தில் தம்மையே ஆலயத்தில் அர்ப்பணித்த இயேசு, ஒவ்வொருநாளும் திருப்பலியில் நமக்கு வாழ்வும், நன்மைகளையும், மகிழ்ச்சியையும் தருகின்ற இறைவனாக வருகின்றார். அவரை மகிழ்வோடு வரவேற்று





6) இளைஞரின் அறிவுரைக்கு ஏற்ப அவன் அவர்களிடம், என் தந்தை பளுவான நுகத்தை உங்கள்மேல் சுமத்தினார்: நானோ அதை இன்னும் பளுவாக்குவேன், என் தந்தை உங்களைச் சாட்டைகளால் அடித்தார்: நானோ உங்களை முட்சாட்டைகளால் ........... என்று கூறினான்.
7) பின்பு சாலமோன் எருசலேமில் அவர் தந்தை தாவீதுக்கு ஆண்டவர் தோன்றிய மோரியா மலைமேல் எபூசியராகிய .......... களத்தில் ஆண்டவருக்கு ஓர் இல்லம் எழுப்பத் தொடங்கினார்.
13) இஸ்ரயேலர் .......... இத்தியர், எமோரியர், பெரிசியர், இவ்வியர், எபூசியர், ஆகிய மக்களினத்தாருள் விடப்பட்ட எல்லாரையும் இஸ்ரயேல் மக்கள் கொல்லாமல் விட்டுவைத்த அவர்களின் வழிமரபினர் எல்லாரையும் சாலமோன், இன்றுவரை உள்ளதுபோல், கட்டாய வேலைக்கு உட்படுத்தினார்.

**மேலிருந்து கீழ்**

1)பிறகு சாலமோன் தம் தந்தை தாவீதைப்போன்று இஸ்ரயேல் நாட்டில் வாழ்ந்து வந்த அன்னியரைக் கணக்கிட்டார்....... எண்ணிக்கை ஓர் இலட்சத்து ஐம்பத்து மூவாயிரத்து அறுநூறு.
2) அதன் அடியில் சுற்றிலும் காளை வடிவங்கள் இருந்தன. பத்து முழ ........... அவை இரண்டு வரிசைகளாக வைக்கப்பட்டிருந்தன. அவை தொட்டியோடு சேர்த்து வார்க்கப்பட்டிருந்தன.
5) ரெகபெயாம், தனது அரசை ......... நிலைநாட்டி, தன்னையே வலிமைப்படுத்திக் கொண்டபோது, ஆண்டவரின் திருச்சட்டத்தைப் புறக்கணிக்கத் தொடங்கினான்.
6) ஆண்டவர் கூறுவது இதுவே: நீங்கள் படையெடுத்துச் சென்று, உம் சகோதரருடன் போரிட வேண்டாம். ...........தம் வீட்டுக்குத் திரும்புங்கள்: ஏனெனில் என்னாலேயே இச்செயல் நிகழ்ந்தது
9) யூதாவைச் சூழ்ந்த நாடுகள் எல்லாம், ஆண்டவர்மீது ........ கொண்டதால், அவை யோசபாத்தை எதிர்த்துப் போரிடவில்லை.
12) இஸ்ரயேல் மக்களின் முன்பாக ஆண்டவர் ......... நாடுகள் செய்த தீமைகளைவிட யூதாவும், எருசலேம் வாழ் மக்களும் மிகுந்த தீமை செய்யவும் நெறி தவறவும் மனாசே காரணமாயிருந்தான்.

**கீழிருந்து மேல்**

3) பின்பு, சாலமோன் ஆண்டவரின் உடன்படிக்கைப் பேழையைச் சீயோன் என்ற தாவீதின் நகரிலிருந்து கொண்டு வருவதற்காக இஸ்ரயேலின் பெரியோர், எல்லாக் குலத் தலைவாகள்,
........ மக்களின் குடும்பத் தலைவர்கள் ஆகியோரை எருசலேமில் ஒன்று கூட்டினார்.
4) இஸ்ரயேல் மக்கள் கொல்லாமல் விட்டுவைத்த அவர்களின் வழிமரபினர் எல்லாரையும் சாலமோன், ........... உள்ளதுபோல், கட்டாய வேலைக்கு உட்படுத்தினார்.
7) இஸ்ரயேலர் யூதாவுக்குப் புறமுதுகு காட்டி ........... கடவுள் இஸ்ரயேல் மக்களை யூதாவிடம் கையளித்தார்.
8) ஆனால், தொழுகை மேடுகள் இஸ்ரயேலினின்று அகற்றப்படவில்லை: இருப்பினும் ஆசாவின் இதயம் ............ வாழ்நாள் முழுவதும் நிறைவுள்ளதாய் இருந்தது.
10) அங்கே நீங்கள் போரிட வேண்டியதில்லை: அணிவகுத்து நின்றாலே .......... யூதாவே! எருசலேமே! உங்கள் சார்பாக ஆண்டவர் கொள்ளும் வெற்றியைக் காண்பீர்கள்!
11) மேலும் அவன் வாளுக்குத் தப்பியவர்களைப் பாபிலோனுக்கு நாடு கடத்தினான்: பாரசீக அரசு எழும்பும் வரை அங்கே, அவர்கள் அவனுக்கும் அவன் புதல்வர்களுக்கும் அடிமைகளாக ...........
13) வெள்ளியும் பொன்னும் கற்களைப்போன்றும், கேதுரு மரங்கள் சமவெளிப் பகுதிகளில் வளரும் அத்தி மரங்களைப் போன்றும் எருசலேமில் ஏராளமாகக் கிடைக்கும்படி ........ செய்தார்.

**விடைகள் அனுப்ப இறுதி நாள் 25-01-2025**

# புத்தாண்டே வருகவே 20



கலைச்சுடர் முனைவர். ஜோ. விண்ணரசன், மேல்வழி

இகம் வரும் புது யுகமே!
வளம் தரும் நிறை அமுதாய்
சுகம் தரும் தரு நிழலாய்
விரைந் திரு இவண் வசமே
பேர் அழிவுகள் சீர் குலைவுகள்
போர் புரிவுகள் பாழ் விளைவுகள்
பார் முழுதுமே நேர்ந்தி டாமல்
குணம் மிகும் பேர் பொழிகவே
கொன் றொழிக்கும் கொள்ளை நோய்கள்
நின் றழிக்கும் வாதை பேய்கள்
என் றென்றைக்கும் அண்டி டாமல்
வென் றொளிரும் சூழ் புரிகவே!
அண்ட மெலாம் அன்பு பெருகி
அனைத் துயிரும் துன்பம் பருகி
துன்ப மில்லா பிழைப்பை நிறுவி
கள்ள மில்லா உழைப்பை அருள்கவே!
சாதி மத மோதல் களோ
பேதம் தரும் வாதங் களோ
மனம் சுடும் சோகங்களோ
வலம் வராத நிலைத் தருகவே
சுய நலம் பேணுதற் போல்
பிறர் நலம் பேணும் வண்ணம்
வஞ் சனை யின்றி எவர்க்கும்
சிந் தனை நெஞ்சம் விழைகவே!
சுற்று சூழல் பாழ் படாமல்
சுற்றம் நட்பு பேர் கெடாமல்
பெற் றோரை கை விடாமல்
பாது காக்கும் மனம் வினைகவே
மாலை களில் மயங்கி டாமல்
மமதை களில் மூழ்கி டாமல்
சூழ்ச்சி களில் சிக்கி டாமல்
வீழ்ச்சி காணா சீர் விளைகவே!





இயல்பையும் அவரது தன்மையையும் நமக்கு வெளிப்படுத்தும் கருவிகளாக உள்ளன. கடவுள் யாரென்ற உண்மையை நமக்கு வெளிப்படுத்துவது இறைவார்த்தை. விவிலியத்தை பல நேரங்களில் நாம் ஒரு சட்டப் புத்தகமாக வாசிக்கின்றோம். ஆனால், அதற்கு மாறாக இறைவன் தன்னையே வார்த்தை வழியாக வெளிப்படுத்தும் ஒரு கருவியாக விவிலியத்தைப் பார்க்க நாம் அழைக்கப்படுகிறோம். இறைவார்த்தைக்கு நாம் செவிகொடுக்கும் போது இறைவனின் குரலைக் கேட்கிறோம். எனவே இறைவனின் பிரசன்னத்தை தம்மில் முழுமையாக தாங்கி வரும் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதை வாசிக்கும்போதும் கேட்கும்போதும் கடவுளின் பிரசன்னத்தையும் அவரது உண்மை இயல்பையும் உணர்ந்து வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

## முதல் வாசக முன்னுரை

பாபிலோனிய அடிமை வாழ்வுக்குப்பின் எருசலேம் வந்த மக்கள் அழிந்த ஆலயத்தை நெகேமியா தலைமையில் மீண்டும் கட்டியெழுப்பினர். எஸ்ரா என்னும் திருச்சட்ட வல்லுநர் எழுந்து இறைவார்த்தையை வாசித்தார். திருச்சட்ட நூல் வேதவாக்கு ஆனதால் அதற்கு தக்க வணக்கம் செலுத்தப்படுகிறது. நாமும் வார்த்தை வழிபாட்டில் பக்தியுடன் பங்கெடுக்க வேண்டுமானால் வேத ஏடுகள், தேவ ஏடுகள் இறைவனின் வார்த்தைகளைக் கொண்ட ஏடுகள் என்ற விசுவாசம் தேவை. இவ்விசுவாசத்தில் வளர்ந்திட இறையருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

அருட்கொடைகள் வெளிப்படும் வகையிலும் அவற்றின் செயல்முறையிலும் வேறுபாடுகள் இருந்தாலும் அனைத்து வரங்களும் ஒரே தெய்வீக ஊற்றிலிருந்தே பிறக்கின்றன. திருஅவையின் பொது நன்மைக்காகவே இவை அளிக்கப்படுகின்றன என்பதை புனித பவுல் உடலின் உவமை வழியாகத் தெளிவுபடுத்துகிறார். நமது தலையுடன் ஏனைய உறுப்புக்கள் பொருந்தி ஒரே உயிரைப் பெற்று வாழ்வது போலவே, நாமும் கிறிஸ்துவை தலையாகக் கொண்ட திருஅவை என்ற உடலின் உறுப்புகளாக இருக்கிறோம் என்ற உண்மையை உணர்த்தும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுக்கள்

1. வழிகாட்டும் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவை தலையாகக் கொண்டு திருஅவை எனும் உடலின் உறுப்புக்களாக இருக்கிறோம் என்பதை உணர்ந்து திருஅவையின் நன்மைக்காகவும், வளர்ச்சிக்காகவும் இணைந்து செயல்பட துணைபுரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்

## மன்றாட்டுக்கள்

1. திருஅவையை வழிநடத்தும் ஆயனே எம் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் தூய ஆவியாரின் வழிகாட்டுதலால் தாங்கள் உம்மிடம் பெற்றுக்கொண்ட கொடைகளை திருஅவையின் நலனுக்காகவும் அதன் வளர்ச்சிக்காகவும் பயன்படுத்தத் தேவையான இறைஞானத்தை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. அன்பின் இறைவா! எம் நாட்டை ஆளும் தலைவர்கள் அனைவரும் தன்னலம் துறந்து பிறர்நலனில் அக்கறை கொண்டு வாழவும், ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக தங்கள் வாழ்வை அர்ப்பணித்து சேவை புரியும் நல் மனதை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஒற்றுமையின் பிறப்பிடமே எம் இறைவா! பல்வேறு காரணங்களால் பிரிந்திருக்கின்ற குடும்பங்கள் அனைத்தும் உமது பிரசன்னத்தாலும், உம் அன்னையின் பரிந்துரையாலும், அக்குடும்பங்கள் அமைதியுடனும் சமாதானத்துடனும் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுத்து வாழும் நல் மனதை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. தியாகத்தின் ஊற்றே இறைவா! எங்கள் பங்கு மக்களையும் பங்கு குருவையும் ஆசீர்வதித்து நாங்கள் அனைவரும் மேற்கொள்கின்ற முயற்சியில் வெற்றியையும் நாங்கள் ஒருவருர் மற்றவர் வளர்ச்சிக்கு எங்களால் இயன்ற உதவியையும் தியாகத்தையும் மேற்கொள்ள எங்கள் மனதை உமது வரங்களால் நிரப்பியருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

### பொதுக்காலம் 3 ஆம் ஞாயிறு (26-01-2025)
### நெகே 8:2-6, 8-10; 1கொரி 12:12-30; லூக் 1:1-4, 4:14-21

## திருப்பலி முன்னுரை

காலங்களையெல்லாம் கடந்து வந்திருக்கும் கடவுளின் வார்த்தை வரலாற்றில் அளப்பறிய மாற்றங்கள் செய்திருப்பதை யாரும் மறுக்க முடியாது. ‘மனித குலத்திற்கு கடவுள் வழங்கியுள்ள கொடைகளில் மிகச்சிறந்த கொடை விவிலியமே’ என்கிறார் ஆபிரகாம் லிங்கன். இன்றை வழிபாடு இறைவார்த்தையின் தன்மையையும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி சிந்திக்க நமக்கு அழைப்பு விடுக்கின்றன. நமது அன்றாட வாழ்வில் பேசப்படும் வார்த்தைகள், பேசுபவரின் தன்மையையும் அவரது இயல்பையும் வெளிப்படுத்துகின்றன. ‘உள்ளத்தின் நிறைவே வாய் பேசும்’ என்பதற்கிணங்க ஒருவர் உச்சரிக்கும் வார்த்தைக்கும் அவரது இயல்புக்கும் தொடர்பு உண்டு. எனவே விவிலியத்தில் இருக்கும் இறைவார்த்தைகள் இறைவனது





# ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருள்பணி. ஆனந்த் லூர்துராஜ் ம.ஊ.ச,
அமலோற்பவ மாதா ஆலயம், பூம்பொழில்நகர்.



### ஆண்டவரின் திருமுழுக்கு விழா (12-01-2025)
### எசா 40: 1-5, 9-11; தீத்து 2:11-14, 3:4-7; லூக் 3:15-16, 21-22

## திருப்பலி முன்னுரை

இயேசுவின் குழந்தைப் பருவம் முடிந்து தன்னையே பக்குவப்படுத்திக் கொண்டு, திடப்படுத்திக் கொண்டு தூய ஆவியாரின் கொடைகளால் நிரப்பப்பட்டு பொதுவாழ்வில் காலடி பதிப்பதை இன்றைய பெருவிழா நமக்கு வலியுறுத்துகிறது. கிறிஸ்து மற்றவர்களின் பாவங்களைத் தம்மீது சுமந்துகொள்வதன் முன் அடையாளமே அவர் பெற்ற திருமுழுக்கு. இறைவாக்கினர் எசாயா கூறுவது போல, “துன்புறும் ஊழியன் இவரே, என் அன்பார்ந்த மகன் இவரில் நான் பூரிப்படைகிறேன்” என்ற குரல் வானிலிருந்து ஒலித்தது. இதன் வழியாக தந்தையாகிய இறைவன் தன் மகனை உலகிற்கு அடையாளப்படுத்தி, தூய ஆவியால் திருப்பொழிவு செய்து தமது பணியைத் தொடங்கச் செய்கின்றார்.

இயேசுவின் திருமுழுக்கு அனுபவத்தின் வழியாக நாம் அறிந்துகொள்வது, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனக்கென்று ஒருசில குறிக்கோள்களை, இலக்குகளைத் தமதாக்கிக் கொண்டு அதில் இறுதிவரை நிலைத்திருக்கத் தம்மை உட்படுத்திக்கொள்ள வேண்டும். நமது திருமுழுக்கில் இறைவனின் இரக்கமும் பரிவும் நேயமும் பிரசன்னமாகியுள்ளது. நமது தகுதியை முன்னிட்டோ, நற்செயல்களை முன்னிட்டோ அல்ல மாறாக, இறைவனின் இரக்கத்தால் அது நமக்கு ஒரு கொடையாக வழங்கப்பட்டுள்ளது. திருமுழுக்கில் நாம் பெற்ற அருள் வாழ்வு தூய ஆவியின் துணையால் வளர வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## முதல் வாசக முன்னுரை

துன்புறும் மக்களுக்கு ஆறுதல் கூறும் பகுதியாக இன்றைய முதல் வாசகம் அமைகிறது. இறைவனை அரசராகவும், ஆயனாகவும் எசாயா அறிமுகப்படுத்துகின்றார். அவர் கையில் செங்கோல், அவரைச்சுற்றி வெற்றியின் சின்னங்கள், வல்லமையும் நீதியும் அவரது பண்புகள். எனவே நாம் எதற்கும் அஞ்சத் தேவையில்லை. இறைவனது

பரிவையும், பாசத்தையும் படம்பிடித்துக் காட்டும் இன்றைய முதல் வாசகத்திற்குச் செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

பாவத்தால் நாம் இழந்துவிட்ட தெய்வீக வாழ்வை நமக்குத் தரவே இயேசு மனிதராகப் பிறந்தார். தனது மரணத்தாலும், உயிர்ப்பாலும் இந்த அருள் வாழ்வை நாம் பெறுவதற்கு வழி செய்தார். இந்த அருள் வாழ்வை நாம் நமது திருமுழுக்கில் பெற்றிருக்கிறோம். ஊனியல்பு வாழ்வு திருமுழுக்கில் நம்மை ஆட்கொண்ட தூய ஆவியார், நம் அருள் வாழ்வை வளப்படுத்தி வளர்ச்சியடைய அருள் வேண்டி இவ்வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

### மன்றாட்டுக்கள்

1. அன்பின் இறைவா! எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினராகிய நாங்கள் அனைவரும் திருமுழுக்கின் வழியாக பெற்ற அரச, குருத்துவ, இறைவாக்குரைக்கும் பணியைச் செவ்வனே செய்ய உமது அருளை நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா! திருமுழுக்குப் பெற்ற நாங்கள் அனைவரும் ஒரே தந்தையின் பிள்ளைகள் என்பதை உணர்ந்து எங்களிடையே உள்ள பிளவுகள் மறைந்து, ஒற்றுமையோடும், சமாதானத்தோடும், தோழமையோடும் வாழ அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. தூய ஆவியாரின் வழியாக புதுவாழ்வை எங்களுக்கு வழங்குபவரே எம் இறைவா! திருமுழுக்கு பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆவிக்குரிய சாட்சிய வாழ்வு வாழவும், அனைவருக்கும் நன்மை தரக்கூடிய, வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் செல்லும் பயனுள்ள காரியங்களை செய்து உண்மையான சீடர்களாக இவ்வுலகில் வாழத் தேவையான அருள் வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. கருணையின் ஊற்றே இறைவா! திருமுழுக்கு என்னும் அருள்அடையாளத்தின் வழியாக உமது அருளை பெற்ற நாங்கள் அனைவரும், ஊனியல்புக்குரிய வாழ்வை விட்டுவிட்டு ஆவிக்குரிய வாழ்வை நாங்கள் தொடர்ந்து வாழ்ந்திட அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## பொதுக்காலம் 2 ஆம் ஞாயிறு (19-01-2025)

## எசா 62:1-5; 1கொரி 12:4-11; யோவான் 2:1-12

### திருப்பலி முன்னுரை

திருவழிபாட்டின் பொதுக்காலத்தைத் தொடங்கியுள்ள நம் ஒவ்வொருவரையும், பழைய வாழ்வை அழித்துவிட்டு புதிய வாழ்வை வாழ அழைக்கின்றார். தூய ஆவியை நம் வாழ்வில் செயல்பட





அனுமதிப்பதன் வழியாக பழைய பாவ வாழ்வை அழித்துவிட்டு இறைவன் தரும் இறையருள் நிறைந்த புதிய வாழ்வை நாம் பெற்றுக்கொள்ள முடியும். இறைவன் எப்பொழுதெல்லாம் புதிய வாழ்வை வழங்குகிறாரோ அப்பொழுதெல்லாம் புதிய பெயரைத் தருகிறார். உதாரணமாக ஆபிராம் - ஆபிரகாம், யாக்கோபு - இஸ்ராயேல், சீமோன் - பேதுரு, சவுல் - பவுல். இன்றைய நற்செய்தி வாசகமும் இயேசு கொண்டுவந்த புதிய வாழ்வை பற்றியே பேசுகிறது. பழைய இரசத்தைவிட புதிய இரசம் சுவைமிக்கதாக இருந்தது என்று சொல்வதன் வழியாக யூத முறைமைகளைவிட இயேசு கொண்டு வந்துள்ள புதிய நெறி மற்றும் புதிய வாழ்வு முறை மேன்மையானது, உயர்வானது, வாழ்விற்கு வளமை சேர்க்க கூறுகிறார். புதிய வாழ்வை பெறுவதற்கான வழி, இறைவன் ஒவ்வொருவருக்கும் வழங்கியுள்ள திறமைகளையும் கொடைகளையும் தனிப்பட்ட மனிதர்களின் நன்மைக்காக அல்ல, மாறாக பொது நன்மைக்காக பயன்படுத்துவது, சுயநலனை விடுத்து பிறர் நலன் பேண வரம் வேண்டி இத்திருப்பலியில் பங்கு பெறுவோம்.

### முதல் வாசக முன்னுரை

இன்றைய முதல் வாசகம் இஸ்ராயேல் மக்களின் பாபிலோனிய அடிமைத்தள வாழ்வின் இறுதியில் எழுதப்பட்டது. இஸ்ராயேல் மக்கள் தாங்கள் செய்த பாவத்தின் காரணமாக யாவே இறைவனால் பாபிலோனுக்கு அடிமைகளாக நாடுகடத்தப்பட்டனர். ஆனால் இப்போது இறைவன் அவர்களை புதிய வாழ்விற்கு அழைக்கிறார். இஸ்ராயேல் மக்களையும் எருசலேம் நகரையும் ஒரு பெண்ணாக உருவகித்து இறைவன் அன்பு மொழி பேசுகின்றார். எப்சிபா (அவளில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்) பெயுலா (மணமுடித்தவள்) என்று இறைவன் வழங்கும் புதிய பெயர்கள் அவர் வழங்கும் புதிய வாழ்வையும் புதிய உறவையும் சுட்டிக்காட்டுகின்ற இவ்வாசகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

### இரண்டாம் வாசக முன்னுரை

பல்வேறு அருட்கொடைகளை தூய ஆவி வழங்குகிறார், திருப்பணிகள் வழியாக நம்மிடையே பேசுபவரும், நம்முள் பிரசன்னமாகி இருப்பவரும் நமது ஆண்டவர் இயேசு, ஆற்றல்மிக்க செயல்களின் ஆதிகாரணர் தந்தையாம் கடவுள். இவ்வாறு மூவொரு கடவுளும் செயல்புரிகின்றனர். இவர்களிடையே பிரிவில்லை மாறாக ஒரே கடவுளாகச் செயல்புரிகின்றனர். இறைவன் வழங்கும் வரங்கள் ஒரு மனிதனின் தகுதியை முன்னிட்டு அன்று மாறாக திருஅவையின் நலனுக்காக, அதன் வளர்ச்சிக்காக அருளப்படுகின்றது. இவ்வருட்கொடைகளுக்காக இவைனுக்கு நன்றி சொல்லி அவற்றை நன்முறையில் பயன்படுத்த இறைஞானம் வேண்டி இவ்வாசகத்தைக் கேட்போம்.